# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 16-09-1994

அன்பளிப்பு 40P


## உலக அகதிகளில் 4.5% இலங்கையர் யுத்தச் செலவு நாளொன்றுக்கு 65,000 பவுண்கள்

உலக அகதிகள் சனத்தொகையில் 4.5% ஆனோர் இலங்கையர்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்று கூறுகிறது. யுத்த சூழ்நிலையால், இலங்கையில் 12 இலட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களில் 5 இலட்சம் பேர் ஐரோப்பிய மற்றும் சர்வதேச நாடுகளிலும், 2 இலட்சம் பேர் தமிழ் நாட்டிலும் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, 5 இலட்சம் பேர் இடம்பெயர்ந்து அகதிகளாய் இலங்கைத் தீவின் பல்வேறு அகதிகள் முகாம்களிலும் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் துன்பவாழ்வு வாழ்வதாகவும் தெரியவருகின்றது. உலகின் வறியநாடுகளின் பட்டியலில் 33 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ள இலங்கை, ஒரு நாளுக்கு 65,000 ஸ்டேலிங் பவுண்களை யுத்தத்திற்குச் செலவிடுவதாகவும் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ■

## தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக
# விடுதலைப்புலிகளுக்கு சிறீலங்கா பிரதமர் அங்கீகாரம்

"தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளே கருதப்படுகிறார்கள்" என, சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க சிறீலங்காவின் வானொலி - தொலைக்காட்சி ஊடாக சிறீலங்கா மக்களுக்கு உரை நிகழ்த்தும் போது உறுதி செய்தார்.

"நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்கொண்டு வரக்கூடிய ஜனநாயக சமூக கட்டமைப்பு ஒன்றை, ஏற்படுத்தக்கூடிய அமைப்பினை உருவாக்குவதற்கு நான் முதன்மை கொடுக்க விரும்புகின்றேன். இந்த நோக்கினை அடைவதற்காகத் தமிழ்ச் சமூகத்திற்கு எனது நட்புக் கரங்களை நீட்ட விரும்புகிறேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளே இதற்குச் சாதகமான பதிலைத் தரவேண்டுமென எதிர்பார்க்கின்றேன். இந்த நாட்டு மக்கள் என்னுடன் இருக்கின்ற காரணத்தால், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்த என்னால் முடியும் என நம்புகின்றேன்" என்பது திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க சிறீலங்கா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஒரு பகுதி ஆகும்.

இவ் உரையில் அவர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டமை, தமிழீழ மக்களின் அரசு

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# தமிழீழத் தேசியத் தலைவர் சிறீலங்கா பிரதமருக்கு அழைப்பு

## லயனல் பெர்னாண்டோ சிறீலங்காவின் பிரதிநிதியாக நியமனம்

தமிழீழத் தேசியத் தலைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், சிறீலங்கா பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு, திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவையோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரையோ வருமாறு, திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவுக்கு உத்தியோகபூர்வ அழைப்பினை விடுத்துள்ளார். சிறீலங்காவின் பாதுகாப்புச் செயலர் ஜெனரல் கமில்டன் வணசிங்காவின் முகவரியிடப்பட்ட, தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கையெழுத்துடன் கூடிய இவ் அழைப்பினை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் கொழும்பில் கையளித்தனர்.

இவ் அழைப்புக் கிடைத்ததை உறுதிசெய்த சிறீலங்காவின் மின்சக்தி, பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த இவ் அழைப்புப்பற்றி சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடாத்துவதற்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# புதிய அரசும் யுத்தத்தை திணித்தால் தமிழீழம் உருவாவதை தவிர்க்க இயலாது

## ஆவணி 10 ஆம் திகதி அன்று நடைபெற்ற
## தளபதி கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் அன்ரன் பாலசிங்கம்



கேணல் கிட்டு நினைவாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை அவரது தாயார் திறந்து வைக்கின்றார்.

*"தேர்தலின் பின்வரப்போகும் சிங்கள அரசு, யுத்தத்தை தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டு, இனவாதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமானால், அது நிச்சயமாகத் தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராக மாறும். அப்போரில் நிச்சயம் தமிழர் வெற்றி பெறுவார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மையாகிவிடும். அத்தோடு, இதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர்கள் சிங்களவர் என்பதும் வரலாறு கூறும்". இவ்வாறு 10.08.94 இல் இடம்பெற்ற கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் உரையாற்றிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.*

அவர் தொடர்ந்து பேசுகையில், "சங்கிலிய மன்னனின் காலகட்டத்தில் எமது தேசத்தின் இறைமை அஸ்தமித்தது. அரசுரிமை அன்னியரால் பறிக்கப்பட்டது. 400 ஆண்டுகளுக்குப் பின், யாழ்ப்பாண மண்ணை மீட்டு யாழ்ப்பாணத்தில் தமிழர்களின் ஆட்சியை நிறுவி, எமது கட்டுப்பாட்டுப் பிரதேசமாகக் கொண்டுவந்த கேணல் கிட்டுவின் சிலை உள்ளது. ஈழத்தின் அஸ்தமனத்தின் இறுதியாக இருந்த சங்கிலிய மன்னனின் சிலையும், புதிய யுகத்தின் உதயமாகக் கிட்டுவின் சிலையுமாக சின்னங்கள் இப்பூங்காவை சித்தரிக்கின்றன.

கிட்டுவின் யுகம் ஒரு காலத்தின் பதிவு என தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார். கிட்டு மனித விடுதலையை ஓர் ஆன்மீக தேடுதலாகப் பார்த்தார். விடுதலை என்றால் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான விடுதலை மட்டுமல்ல. அகரீதியான விடுதலை பற்றியும் அவர் சிந்தித்துள்ளார். 1989 இல் இந்தியாவில் வீட்டுக்காவலில் கிட்டு வைக்கப்பட்டிருந்தார். அப்போது தமிழீழத்தில் இந்தியப்படை - விடுதலைப் புலிகள் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது".

தொடர்ச்சி நடுப்பக்கத்தில்...


உள்ளே...

○ கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் - நடுப்பக்கங்கள்

○ ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்த மைந்தன் பக்கம் - 6

○ தமிழீழ விளையாட்டு அரங்கு பக்கம் - 14

○ காஷ்மீர் - இந்தியாவின் இரண்டாவது தமிழீழம் பக்கம் - 5

○ தமிழீழ உட்கட்டுமானம் பக்கம் - 10

○ சிறுகதை :- பங்களிப்பு பக்கம் - 11


# முழு அளவிலான பொருளாதாரத்தடை நீக்கமே சுமூக நிலை திரும்ப வழி வகுக்கும்

## □ கைதிகள் விடுவிப்பின் போது தேசியத்தலைவர் விடுத்த செய்தி

"சிறீலங்காவின் புதிய அரசாங்கம், பொருளாதாரத் தடையில் ஒரு பகுதியினை அகற்றியதை அடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, பத்து சிங்கள யுத்தக் கைதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறைப்படி ஒப்படைத்தபொழுது, தமிழீழத் தேசியத் தலைவரின் செய்தி ஒன்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டது. அதில், 4 வருடங்களாக அமுலில் இருந்த பொருளாதாரத் தடையின் சில பகுதிகளை சிறீலங்காவின் புதிய பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க அகற்றியமையை வரவேற்பதுடன், எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக 10 யுத்தக் கைதிகளை விடுவிக்கின்றோம். முழு அளவிலான பொருளாதாரத் தடை நீக்கமே சுமூகநிலை திரும்புவதற்கு ஏற்ற நடவடிக்கை. எனவே இதனை சிறீலங்காவின் புதிய அரசாங்கம் விரைவில் செய்யும் என நம்புகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



## வீறும் வீரமும்

சிறீலங்காவின் புதிய அரசாங்கத்தின் பிரதமராகிய திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதில் வீறுடன் ஈடுபட்டு வருவதாக உலகப் பத்திரிகைகள் பல எழுதியுள்ளன. இந்நேரத்தில் அவர் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருந்த பொருட்களில் 28 பொருட்களுக்கான தடையினை அகற்றியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றே. ஆயினும், திருமதி சந்திரிகா எடுத்துவரும் முயற்சிகள், சிறீலங்கா அரசாங்கம் நடைமுறையில் செய்த தவறுகளைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளே. இதனை நல்லெண்ண வெளிப்பாடாகவும் கருதலாம்.

இவரின் தந்தையார் இங்கிலாந்தில் படித்துவிட்டு நாடு திரும்பிய *1926* ஆம் ஆண்டில், இலங்கை அரசியலில் இருந்த குறைபாடுகளைக்கண்டு, இலங்கைத் தீவுக்கு சமஸ்டி ஆட்சிமுறையே சிறந்தது; தமிழர்களுக்கு ஒன்று, மலைநாட்டுச் சிங்களவர்களுக்கு ஒன்று, கரையோரச் சிங்களவர்களுக்கு ஒன்று என மூன்று சபைகள் அமைக்கப் படவேண்டுமென முடிவெடுத்து, வீறாப்புடன் செயற்பட்ட நாட்கள் நினைவுக்கு வருகின்றன. ஆயினும், பின்னர் பௌத்த சிங்கள பேரினவாதம் முனைப்புப் பெற்றபோது, அதனை எதிர்த்து தனது கருத்தை முன்னெடுக்க முடியாமல் வீரமின்றி, அதற்குப் பலியானது மட்டுமன்றி, தனக்கு ஆளும் சந்தர்ப்பம் கிடைத்த வேளையிலும் கூட, தான் முன்பு வீறாப்புடன் பேசிய கருத்துக்களுக்கு வீரத்துடன் செயல்வடிவம் கொடுக்கத் தவறியமை வரலாற்றுச் செய்தி.

இன்றும் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவுக்கு வீறாப்பு இருந்தாலும், பௌத்த சிங்கள பேரினவாத அமுக்கக் குழுக்களூடாகத் தனது கருத்தை முன்வைத்து நடைமுறைப்படுத்த அவருக்கு நிறைய வீரம் தேவை.

வீரம் என்பது தன்னலம் கருதாது, தனது இலட்சியத்தை நிலைநிறுத்தும் சக்தி. இதனால்தான், விடுதலைப் புலிகள் வீரம் உள்ளவர்களாக தங்கள் உயிரையே உயிராயுதங்களாக மாற்றி, ஆயுதபலம் பொருந்திய சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறை, ஒடுக்குமுறைகளை எதிர்த்து தமிழீழத் தாயக மண்ணையும், உயிர்களையும், உடமைகளையும் காத்து நிற்கின்றனர். எனவே இத்தகைய வீரம் செறிந்த போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனும் சொற்றொடர்க்கு ஊடாக கொச்சைப்படுத்தும் கோழைத்தனத்தை சிறீலங்காவின் புதிய அரசாங்கம் பின்பற்றாது, அரசியல் யதார்த்தத்தை வீரத்துடன் சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

இதுதான் உண்மை. இதுதான் வரலாறு. இதுதான் நடைமுறை யதார்த்தம் என்பதினை வீரத்துடன் எடுத்துரைக்கும் சக்தி புதிய அரசாங்கத்திற்கு வருமானால், நிச்சயமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, சமாதானத் தீர்வு காண்பது சாத்தியமாகும்.

ஆனால், சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, சமாதான முயற்சிகள் தோல்வியடைய நேரிட்டால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும்வரை போர் தொடரும் என வடக்கில் படைகளுக்கு மத்தியில் உரை நிகழ்த்தியமை, சில உள்நோக்குகளுடன் சமாதான முயற்சிகளில் சிறீலங்கா இறங்க முயற்சிக்கின்றதா என்ற சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

நிபந்தனையற்ற திறந்த பேச்சுவார்த்தை என்பது, உள்நோக்குகளுடன் தொடங்கப்படாது இருபகுதியினரும் தமது உண்மை நிலைகளை எடுத்து விளக்கி, முன்பு கீறப்பட்ட எந்த ஒரு சட்டங்களுக்குள்ளும் அகப்படாது உண்மைகள், நடைமுறை யதார்த்தங்கள் மத்தியில் ஏற்புடைய தீர்வை உருவாக்குவதே பயனுடையதாக அமையும். இதனை உணர்ந்து சிறீலங்காப் பிரதமர் வீறாப்புடன் மட்டுமல்லாமல், வீரத்துடனும் செயற்படவேண்டிய காலம் இது என்பதே எமது கருத்து. வீரத்துடன் கூடிய செயற்பாடே நிரந்தர அமைதியைத் தோற்றுவிக்கும். ■

# இந்திய உபகண்டத்தில் இந்திய எதிர்ப்பு வலுப்பெறுகிறது

பங்களாதேசில் இந்திய சேலைகள் தீ மூட்டி எரிக்கப்பட்டு வருகிறது. நேபாளத்தில் இந்தியாவில் பதிவுசெய்யப்பட்ட கார்களின் இறக்குமதியை நிறுத்துவது என்பது பெரும்பாலும் உறுதியாகி வருகிறது. இவை போன்ற பல சம்பவங்கள் இந்திய உபகண்டத்தில் இந்திய எதிர்ப்பு வலுப்பெற்று வருவதை உலகுக்கு உணர்த்திவருகிறது.

" எமது அயல் நாடுகளுடனான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை ஒரு விளையாட்டாகக் கருதும் புதுடில்லி அதிகாரிகளும், அமைச்சர்களும் இந்த நிலைமைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனப் புதுடில்லி பத்திரிகை ஒன்றில் அரசியல் விமர்சனம் எழுதும் அஜீத் பட்டசர்ஜா குறிப்பிட்டுள்ளார் இந்திய -பங்களாதேஸ் எல்லையிலுள்ள பராக்கா அணைக்கு ஊடாகப் பங்களாதேசுக்கு செல்லும் நீரை தடை செய்யக்கூடியவகையில் கங்கையில் அணைகட்டியதை அடுத்து பங்களாதேஸ் உடனான இந்திய உறவுகள் மோசமடைந்து வருகிறது. கோடைகாலத்தில் நீரின்றித் தவிக்கும் பங்களாதேஸ் மக்களுக்கு மேலும் துன்பத்தைக் கொடுக்க கூடிய வகையில், மழைக்காலத்தில் இந்த பராக்கா அணைக்கட்டு திறந்து விடப்படுகிறது. இதனால் பங்களாதேசின் விவசாயக்காணிகள் முக்கால் பங்களவு வெள்ளத்தில் மூழ்கி விடுகின்றன. இதன் விளைவாக பங்களாதேஸ் மக்கள் பெருஞ்சிரமங்களையும் இழப்புக்களையும் அனுபவிக்கின்றனர். "இந்தியாவிலிருந்து எதிர்பார்க்கக்கூடிய பெருந்தன்மைக்குப் பதிலாக வெறுப்புத்தன்மையையே காணக்கூடியதாக இருப்பதாக டாக்கா பத்திரிகைகள் எழுதியுள்ளன. நேபாளம், சீனாவுடன் ஆயுத கொள்வனவு செய்தது என இந்தியா தனது எல்லைகளை ஆறு மாதங்கள் மூடி நேபாளத்திற்கு பொருளாதாரத்தடையை ஏற்படுத்தியமை, நேபாளமக்கள் மத்தியில் பலத்த கசப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் நீர் விநியோகக்கொள்கையினால் நேபாளமும் பலத்த கஸ்டங்களை எதிர்நோக்கிவருகின்றது. பிரதமமந்திரி கிரியா பிரசாத் கொயிராலாவின் காங்கிரஸ் அரசாங்கம், நாட்டை இந்தியாவுக்கு விற்றுவிட்டது என நேபாளத்தின் எதிர்க்கட்சி தலைவர் பகிரங்கமாகக் கூறியுள்ளார். "நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து என்றோ ஒரு நாள் எங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படும்" என நேபாளத்தின் முன்னைநாள் ஐக்கிய நாடுகள் தூதுவர் ரிசிகேஸ் சாகா கூறியுள்ளார். மாலைதீவு மக்களும் இந்திய இராணுவத் தலையீடுகளால் மனம் உடைந்து காணப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கையில் தமிழர் பிரச்சினையில் இந்தியா கடைப்பிடிக்கும் சுயநலப்போக்கு தமிழ்நாட்டிலும் உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களிடையே பலத்த அதிருப்தியை தோற்றிவித்துள்ளது.

எனவே இந்தியா தனது அண்டைநாடுகளின் விடயத்தில், அரசியல் யதார்த்தத்தை பிரதிபலிக்கக் கூடிய போக்குகளை கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டிய ஒரு காலகட்டம் இது என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ■

# பாப்பூ நியூகினியாவில் அமைதி உடன்படிக்கை

பாப்பூநியூகினியாவில் பிரதமர் சேர் யூலியஸ் சானுக்கும், போகெய்ன்வில்ல புரட்சிகர இராணுவத்தின் (Bougainvilla Revolutionary Army) தலைவர் சாம் கானோவுக்கும் இடையில், சொலமன் தீவில் நடைபெற்ற 4 மணிநேரப் பேச்சுவார்த்தையின் பின்னர், அமைதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

சொலமன் தீவுகளின் பிரதமர் பிரான்சிஸ் பில்லி சில்லி தலைமையில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையின் பின்னர், இந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என சொலமன் தீவுகளின் பிரதமர் அறிவித்துள்ளார். ■

# யாழ். - வன்னித் தேர்தலை இரத்துச்செய்ய தேர்தல் ஆணையாளர் கூட்டம்

யாழ். - வன்னிப் பகுதிகளில் சிறீலங்கா அரசாங்கம் ஆயுத முனையில் திணித்த தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்வதற்கென சிறீலங்காவின் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கூட்டம் ஒன்றை நடத்தினார். இதனாலேயே இப்பிரதேசங்களுக்கான தேர்தல் முடிவுகள் உடன் அறிவிக்கப்படாது காலதாமதமாகியது. சந்திரானந்த டி சில்வா நடாத்திய இக்கூட்டத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் விக்கிரமசிங்கா, சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி, சட்டத்தரணி சொக்சி ஆகியோர் உட்பட தேர்தலில் பங்குபற்றிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மிகமிகக் குறைந்தளவு வாக்காளர்கள் வாக்களித்துள்ளமையாலும், பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாலும் யாழ். -வன்னி மாவட்டங்களுக்கான தேர்தலை இரத்துச் செய்வதற்காகவே அக்கூட்டத்தைக் கூட்டியதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார்.

அந்நேரம் குறுக்கிட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரான சட்டத்தரணி சொக்சி தேர்தல் இரத்துச் செய்யப்பட்டால், 14 நாட்களுக்குள் மறுவாக்குப் பதிவுக்கான பிரகடனம் விடுக்கப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த இயலாது எனவே நடைபெற்ற தேர்தலை அங்கீகரித்து முடிவுகளை வெளியிடுவதே ஒரேவழி எனக் கூறிய ஆலோசனையின் பேரிலேயே, பின்னர் இப்பகுதிகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ■

# சமாதான சூழலின் நிலை குறித்து செய்தியாளர்களிடம் விடுதலைப்புலிகள் விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்செல்வனும், அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கமும் நடப்பு நிகழ்வுகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசியுள்ளனர். வடக்கில் கடற்படையினர் ஒழுங்குமுறையாகவும், திட்டமிட்டவாறும் மீனவர்களை இம்சைப்படுத்தி வருகின்றார்கள். இதனை, சமாதான சமிக்சையாகக் கொள்ளமுடியாது என திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால், கடந்த எட்டாம் திகதி மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைச் சுட்டிக்காட்டிய திரு. தமிழ்செல்வன், இது சமாதானத்திற்கான சூழலை உருவாக்காது எனத் தெரிவித்துள்ளார். அத்துடன், போர் நிறுத்தத்தின் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தியுள்ளார். போர் நிறுத்தத்தால் விடுதலைப் புலிகளுக்கு இலாபம் எனவும், போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள அவர்களுக்கு போர் நிறுத்தம் உதவுவதாகவும் சிறீலங்காப் படைத்தளபதிகளும், அரசில் உள்ளவர்களும் கருதுவதாலேயே போர் நிறுத்தம் பின் தள்ளப்படுவதாக செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த திரு. தமிழ்செல்வன் பொதுவாக நம்பப்படுவது போலன்றி, போர் நிறுத்தத்தினால் விடுதலைப் புலிகள்தான் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். போர் நிறுத்தத்தினால் ஆயுதங்களையும், யுத்த தளபாடங்களையும் வழங்கும் பிரதான வழங்குநரை நாம் இழக்கின்றோம் எனத் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். தமக்கு ஆயுதங்களை விநியோகிப்பவர்கள் சிறீலங்கா இராணுவத்தினரே எனக் குறிப்பிட்டுள்ள அவர், பூநகரிக் கூட்டுப்படைத் தளத் தகர்ப்பின்போது, கைப்பற்றப்பட்ட பெருந்தொகை ஆயுதங்களின் பெயர், விபரங்களையும் வரிசைப்படுத்தினார். ■

**** மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது. ** லெப். கேணல் திலீபன்**

# இரு கப்பல்களைத் தகர்த்த முதற்பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணி

சிறீலங்காவின் தேர்தல் தினத்தன்று காங்கேசன்துறை துறைமுகத்துள் சிறீலங்கா கடற்படையின் கட்டளையிடும் தலைமைத் தாய்க் கப்பலையும் அதற்குத் துணைநின்ற 'டோறா' பீரங்கிப் படகையும் தகர்த்தெறிந்த முதற்பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணியின் வெற்றி நினைவாக, ஆவணி 26, 27 ஆம் திகதிகளில் தமிழீழமெங்கும் எழுச்சிநாள் கொண்டாடப்பட்டது. கறுப்பு, சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்ட வீதிகளூடாக, முதற்பெண் கடற்கரும்புலியாகச் சென்று, நெஞ்சையுருக்கும் தியாகசாதனை படைத்த வீராங்கனை அங்கயற்கண்ணியின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. அந்நேரம் மலர்கள் தூவியும், விளக்கேற்றியும் மக்கள் அஞ்சலி செலுத்தினர். வெற்றி,வீரவணக்கக்கூட்டங்களும் பல இடங்களில் நடாத்தப்பட்டன. ■

## போராட்டத்தில் பங்களிக்க சகலரும் உழைக்க வேண்டும் - இளஞ்சேரன்

தமிழீழ நிர்வாக சேவையின், பூநகரிக் கிளையை ஜெயபுரம் கிராமத்தில் , பூநகரிக் கோட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. விமலன் தலைமையில், மன்னார் மாவட்ட நிர்வாக சேவைத் துணைப் பொறுப்பாளர் திரு. அ. இளையவன் திறந்து வைத்தார். மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர், திரு. ராம்ராஜ் அவர்களும், பூநகரிக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. பிறேமகாந்தன் அவர்களும் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார்கள். தேசியக் கொடியினை முழங்காவில் வட்டப் பொறுப்பாளர் திரு. கதிரவன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

"எமது பாரம்பரிய தமிழீழத்தைக் கட்டி எழுப்புவதற்கு அரச சார்புள்ள, அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் எம்முடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும்". இவ்வாறு கிளிநொச்சிக் கோட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. இளஞ்சேரன் தெரிவித்தார்.

"எமது பாரம்பரிய தமிழீழத்தைக் கட்டி எழுப்புவதற்கு, நாம் அன்றாடம் அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். தமிழீழத்தில், ஒரு நாளைக்கு ஒரு போராளியாவது எமது மண்மீட்புக்காய் போரிட்டு, மடிந்துகொண்டிருக்கின்றார். ஆகவே, எமது பாரம்பரிய தமிழீழப் பிரதேசங்களை மீட்டெடுக்கும் பங்களிப்புக்காக சகல பொது நிறுவனங்களும் எம்முடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டும்" என, திரு. இளஞ்சேரன் அவர்கள் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இவ்விழாவில், பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். ■

## அமைதி ஒன்றே யாழ். மக்களின் எதிர்பார்ப்பு

### சிறீலங்காப் பிரதமரிடம் விடுதலையான கைதிகள் தெரிவிப்பு

"யாழ்ப்பாண மக்கள் அமைதி ஒன்றையே சிறீலங்காவின் புதிய அரசாங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர். அவர்களுக்கு அதிக அளவு நிவாரணப் பொருட்களை அனுப்பிவைப்பதும் அவசியமான ஒன்று".

இவ்வாறு விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருந்து, நல்லெண்ணநோக்கின் அடையாளமாக, தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் விடுவிக்கப்பட்ட, பத்துச் சிங்களக் கைதிகளும், இம்மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் தம்மைப் பார்வையிட வந்த சிறீலங்காவின் புதிய பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவிடம் எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த சிறீலங்காப் பிரதமர் நேர்மையானதும், திறந்த மனதுடனுமான பேச்சு வார்த்தைகள் மூலம் தனது அரசாங்கம், தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலும் எனவும் நீண்டகால யுத்தம் பெருமளவிலான உயிர்ச்சேதங்களை விளைவித்தது ஒன்றை மட்டுமே தன்னால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது எனவும் கூறினார். ■

## சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா - காமினி

சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக சிறீலங்காவின் பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தெரிவை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு அமைப்பான பொதுசன ஐக்கிய முன்னணி பின்னர் அங்கீகரித்துள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக, சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினரான காமினி திசாநயக்காவின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி இன்றைய சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்காவை நிராகரித்ததுடன், தனது தோல்விகளுக்கு அவரே பொறுப்பு எனக்குற்றம் சாட்டியதாகவும் தெரிகிறது. காமினி திசாநாயக்காவையே எதிர்க்கட்சித் தலைவராகவும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்ந்தெடுத்து, முன்னாள் சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நிராகரித்திருந்தது. ■

## விஜேவீரவின் மனைவி பிள்ளைகள் விடுவிக்கப்படுவர்

600 பேர் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதிகளாகியுள்ளனர். "நீண்டகாலமாக விசாரணை எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தடுப்புக் காவல் கைதிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஐவர் கொண்ட ஆணைக்குழுவொன்று நியிமிக்கப்படவிருக்கிறது. இந்த ஆணைக்குழு, அதன் விசாரணைகளை நடாத்தி, தடுப்புக்காவலில் உள்ளவர்களில், எவரெவர் மீது குற்றம்சாட்டி வழக்குத் தொடரலாம் என்பது தொடர்பான அறிக்கைகளை 3 மாதத்தில் சமர்ப்பிக்கும்" இவ்வாறு சிறீலங்காவின் வெளிநாட்டு, வர்த்தக, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அறிவித்துள்ளார்.

அறுநூறு பேர்வரை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதிகளாக உள்ளனர் எனவும் அத்துடன், காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் அடக்குமுறைகளினால் இறந்துபோனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக பிரித்தானிய, கனடிய இராஜதந்திரிகள் உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஆராய்ந்ததாகவும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

அத்துடன் சேகுவரா இயக்கத் தலைவர், ரோகண விஜேவீராவின் மனைவி, பிள்ளைகள் தடுப்புக்காவலில் இருந்தால், அவர்களையும் விடுவிப்போம் எனவும் கூறினார். ■

## சந்திரிகாவை கொலை செய்து ஆட்சியை கைப்பற்ற இராணுவம் திட்டம்

கடந்த பொதுத்தேர்தலுக்கு முதல் நாளன்று, சிறீலங்காவின் இன்றைய பிரதமரான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, முன்னாள் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கா, சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத்தளபதி ஆகியோரையும் கொலை செய்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்ற சிறீலங்கா இராணுவம் திட்டமிட்டு இருந்ததாகவும், இது குறித்து தற்போது விசாரணை நடைபெற்று வருவதாகவும் தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா பத்திரிகையாளரிடம் கூறியுள்ளார்.

முன்னாள் சிறீலங்கா இராணுவத்தளபதியும் தற்போதைய தாய்லாந்துத் தூதுவருமான ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவுக்கும் இச்சதிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும், புரட்சிக்கான முயற்சி நடைபெற்ற வேளையில் அவர் தாய்லாந்திலிருந்து சிறீலங்கா திரும்பியிருந்தார் எனவும் கூறப்படுகிறது அத்துடன் பலாலியில் கடமையாற்றும் சரத்பொன்சேகா, காமினிகுணசேகரா உட்பட்ட நான்கு சிறீலங்கா உயர்இராணுவ அதிகாரிகளின் பெயர்களும் இதனுடன் சேர்த்து பேசப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது. ■

## ஆனையிறவுப் பாதை திறப்புக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நிபந்தனை

ஆனையிறவுப் பாதையினை போக்குவரத்துக்கு திறப்பதாயின், பயணிகளான பொது மக்களை சிறீலங்காப் படைகள் சோதனையிடமாட்டார்கள் என்ற உறுதிமொழி சிறீலங்கா அரசாங்கத்தால் வழங்கப்பட்டால் மட்டுமே, அதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி வழங்குவர் என யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலண்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவழி மக்களின் பிரித்தானிய இயக்கத் தலைவர் சின்னமணி, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரிடம் இவ்விடயமாகப் பேசியபொழுதே இந்நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளது. ■

## அவசரகாலச் சட்டம் தொடர்கிறது

சிறீலங்காவின் புதிய அரசாங்கம், பாரளுமன்றத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அம்பாறை, புத்தளம், அநுராதபுரம் மாவட்டங்களில் அவசரகாலச் சட்டத்தை தொடர்வதற்கான அனுமதியை ஏகமனதாக பெற்றுக்கொண்டது. இதன் மூலம் மீளவும் இப்பிரதேசங்கள் அவசரகாலசட்டத்துள் வந்துள்ளன . அதேவேளை இம்மாவட்டங்கள் நீங்கலான ஏனைய மாவட்டங்களில், அவசரகாலச் சட்டத்தை சிறீலங்காவின் புதிய அரசாங்கம் விலக்கிக்கொண்டுள்ளது. ■

### மீண்டும் பொதுத் தேர்தல்

"சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் 60 நாட்களுக்குள் நடைபெற இருக்கிறது. இதையடுத்து ஜனாதிபதித் தேர்தலின் வெற்றியை உரியமுறையில் பயன்படுத்தி, ஆட்சி செய்வதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையைப் பெறக் கூடிய வகையில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடாத்தப்படக் கூடும்". இவ்வாறு சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும் சிறீலங்காவின் துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு அமைச்சருமான எம். எச். எம். அஸ்ரப் தெரிவித்துள்ளார். ■

## பாக்கிஸ்தான் நீதிபதி தலைமையிலான குழு யாழ். - வன்னித் தேர்தலை நிராகரித்தது

பாக்கிஸ்தான் நீதிபதி டொரா இஸ்மாயிலைத் தலைவராகவும், ஐக்கிய நாடுகளின் விசேட தொடர்பாளரான டோரா பரம்சாமியை இணைப்பாளராகவும் கொண்ட 42 சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அங்கத்துவம் வகிக்கும் சர்வதேச யூரர்கள் சபை, சிறீலங்காவின் யாழ். - வன்னி மாவட்டத் தேர்தல்களை அர்த்தமற்றது என நிராகரித்துள்ளதுடன், ஆயுதக் குழு இப்பகுதிகளில் மக்கள் மேல் ஆயுதப் பயமுறுத்தல் செய்ததும் அல்லாமல், தனது வேட்பாளர்களையும் நிறுத்தியிருந்தது என வும் குறிப்பிட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் யாழ். -வன்னித் தேர்தல்கள் ஒழுங்கானமுறையில் நடைபெறவில்லை, அதனால் அவற்றைச் செல்லுபடியற்றவை எனத் தீர்ப்பளிக்க வேண்டுமென கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்துள்ளது.

வவுனியாவில், நான்கு வாக்குப் பெட்டிகளுக்கான திறப்புக்கள், வாக்கு எண்ணும் இடத்தில் காணாமல் போயிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இவர்கள் கூறியுள்ளனர். ■

## பம்பாய் வெங்காயம் அமோக விளைச்சல்

இம்முறை வடபகுதியில் பம்பாய் வெங்காயம் பெருமளவில் செய்கைபண்ணப்பட்டுள்ளது. அராலி, கோப்பாய் பகுதிகளில் பம்பாய் வெங்காயச் சாகுபடி, அமோக விளைச்சலை அளித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டில், திட்டமிட்ட முறையில் சுழற்சி பயிர்ச்செய்கைகளும் மாற்றுப் பயிர்ச்செய்கைகளும் நடாத்தப்பட்டு வருவதினால், இப்பகுதி விவசாயப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பக்கத்துணையாக நின்று, பாடுபட்டு வருகின்றதென யாழ்ப்பாண விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார். ■

# பாரிய அளவிலான பனை நடுகைத் திட்டம்

தமிழீழத்திலிருக்கின்ற பனை மரத் தொகையை 2000 ஆண்டளவில் இரட்டிப்பாக்கும் நோக்குடன், "கற்பகச்சோலை" என்னும் பாரிய பனை நடுகைத் திட்டத்தைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் முதற்கட்ட முயற்சியாக ஐந்து வருடங்களில் 50 லட்சம் பனை விதைகள் நாட்டப்படவுள்ளன.

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபை போன்ற துறைசார் நிறுவனங்கள் கிராமிய உற்பத்திக்குழுக்கள், பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்கள், பாடசாலைகள், புனர்வாழ்வுக்கமுகங்கள், சாரணர்குழுக்கள், மற்றும் பொது ஸ்தாபனங்கள், ஆர்வமுள்ள பொது மக்கள் ஆகியோர் ஊடாக இப்பனை நடுகைத்திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப்பகுதியினர் நடைமுறைப்படுத்த வுள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக பனை நடுகை முயற்சியில் ஈடுபட்டுவந்துள்ளது. 1991 ல் 1,50,000 பனைவிதைகளும், 1992-ல் 1,57,000 பனைவிதைகளும், 1993-ல் 346,000 பனைவிதைகளும் நாட்டப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை வீதி ஓரங்கள், மைதானக்கரைகள் போன்ற பொது இடங்களிலேயே நாட்டப்பட்டன. கற்பகச்சோலை திட்டத்தின் கீழ் பெரும்பாலான விதைகள், பனந்தோட்டங்களாகவும், மாதிரிப் பண்ணைகளாகவும் நாட்டப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்படவுள்ளன. ■

# சுய தொழில் கடன் திட்டம் 1593 குடும்பங்களுக்கு பயன்

கடந்த வருட நடுப்பகுதியிலிருந்து இம் மாதம் வரை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுய தொழில் கடன் திட்டத்தின் மூலம் 1593 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை மேம்படுத்துவதுடன் சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் வட தமிழீழத்தின் பல் வேறு பகுதிகளிலும் இக்கடன் திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நெற்செய்கை, உருளைக்கிழங்கு செய்கை, மட்பாண்ட உற்பத்தி, கோழிவளர்ப்பு, கடற்தொழில், கைத்தொழில் போன்ற பல்வேறுபட்டதொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுவரும் இக்கடன்கள், மீள அறவிடப்பட்டு தொடர்ந்தும் பல பயனாளிகளுக்கு வழங்கப்பட்டும் வருகின்றன.

இச் செயற் திட்டத்தில் இது வரை மொத்தமாக ஒரு கோடி முப்பது லட்சம் ரூபாவுக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# சூதாடிய குற்றத்திற்காக பெண் உட்பட நால்வர் கைது

சூதாடிய குற்றத்திற்காக குடும்பப் பெண் ஒருவருக்கு, பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில், இரண்டாயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறு நீதியாளர் பிரதீபா தீர்ப்புக் கூறினார்.

இப்பெண்ணின் கணவர் உட்பட மூவர், நாகர் கோவில் இடம் பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் சூதாடிக்கொண்டிருந்தபோது, நாகர் கோவில் காவல் துறையினர் கையும் மெய்யுமாகப் பிடித்து கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சூதாட்டத்தில் ஈடுபட்ட மற்றைய இரண்டு பேருக்கும், தலா ஆயிரம் ரூபா குற்றப்பணமும் ஒரு மாத சிறையும் விதிக்கப்பட்டது.

செல்லத்துரை துரைநாயகம், குணரத்தினம் ஜெயசீலன், ஜெயசீலன் சர்மிளா ஆகியோரே சூதாடிக், காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர்கள். ■

# முல்லையில் தூயவிதைகள் உற்பத்தி நடவடிக்கை

முல்லை மாவட்டத்தில் தூய விதைகளை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கையை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான தூயவிதைகளை விவசாயிகளுக்கு வழங்கி அவர்களூடாகவே இவ் உற்பத்தியைப் பெருக்கும் முகமாக 12 இன நிலக்கடலை மாதிரித் துண்டங்களும், பயறு, கௌபி, மிளகாய், புடோல், பாகல் ஆகிய தூய பயிர் மாதிரிகளின் துண்டங்களும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

அத்துடன் இத்துண்டங்களை சகல விவசாயிகளும் பார்வையிடவும், விளக்கம் பெறவும் அண்மையில் ஒட்டிசுட்டானில் பயிர்ச் நிகழ்வு ஒன்றும் நடாத்தப்பட்டது.

பயிர்ச் செய்கையில் உச்ச விளைவுபெற வேண்டுமானால் தூயவிதைகளை பாவிக்க வேண்டியது அவசியமானதாகும். இவ் விதைகளை ஒவ்வொரு விவசாயியும், தாங்களாகவே உற்பத்தி செய்வதன்மூலம் நம்பகமான சிறந்த விதைகளைப் பெறமுடியும்.

எனவே இத்திட்டத்தை எதிர்காலத்தில் வட தமிழீழம் முழுவதும் பெருமளவில் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ■

# ஜனாதிபதி வேட்பாளராக விவசாயியை நிறுத்த முடிவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது, ஒரு விவசாயியைத் தேர்தலில் போட்டியிடச் செய்யவேண்டும் என, மகாவலி 'சீ' பிரிவு சுதந்திர ஐக்கிய விவசாயிகள் கழகம் முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பாக, இவ்விவசாயிகள் கழகம் பல செல்வாக்கு மிகுந்த விவசாயிகளைத் தெரிவுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கை பண்டைய காலத்தில் ஒரு விவசாய நாடு என்றும், ஆனால், இன்று விவசாயிகள் தமது விவசாயக் கடன்களைத் தாக்குப்பிடிக்க முடியாது, தற்கொலை செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஒரு விவசாயி போட்டியிடுவது தவிர்க்க முடியாத நிகழ்வு எனவும் அக்கழகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு விவசாயியினாலேயே முடியும் என்றும், எனவே எதிர்காலத்தில் இந்த நாடு உணவில் தன்னிறைவை அடையவேண்டுமாயின், தமது கழகத்தை நாட்டு மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் எனவும், அக்கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ■

# அராலித்துறையில் அதிரடி மூன்று இராணுவத்தினர் பலி

## இரு சடலங்கள் கைப்பற்றப்பட்டன

அராலித்துறைப் பகுதியில், பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கென பதுங்கியிருந்த இரண்டு இராணுவ அணிகள் மீது, அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் மூன்று நிமிடநேரம் மட்டுமே நீடித்தது. இத்தாக்குதலின் போது, கொல்லப்பட்ட இரண்டு இராணுவத்தினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன -பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன - இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை -

கொல்லப்பட்ட இரண்டு இராணுவத்தினரது சடலங்களையும் பெருந்திரளான மக்கள் சென்று பார்வையிட்டனர் -

கொழும்புத்துறைப் பகுதியில் மேற்படி கைப்பற்றப்பட்ட இரண்டு இராணுவத்தினரதும் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. அச்சமயமே பெருந்திரளான மக்கள் முண்டியடித்துக் கொண்டு பார்வையிட்டுச் சென்றனர். ■

# சிங்களவரின் வாக்கால் பதவிக்கு வந்து தமிழர் விருப்பத்தை நிறைவேற்றுவது உண்மையான ஜனநாயகம் அல்ல

உண்மையான ஜனநாயகம் என்பது, சிங்கள மக்களுடைய வாக்குப்பலத்தினால் அதிகாரத்துக்கு வந்து, ஐந்து இலட்சம் வாக்காளர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது அல்ல, என சிங்களத் தினசரியான திவயினவில் வெளிவந்த கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பான்மையினரின் கருத்தை அறியாமலேயே, தமிழ் அரசகரும மொழியாக்கப்பட்டது. சாதாரண சிங்கள மக்கள் மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக தீர்வொன்றை நாடியுள்ளனர். அவற்றில் முதலாவது, வடக்கு -கிழக்கு மாகாணங்களை இரு மாகாணங்களாக நிரந்தரமாகப் பிரிப்பது, இரண்டாவது 1991 ஆம் ஆண்டளவில் இந்திய விசா பெற்றிருக்கும் சுமார் 1,32,000 மலையகத் தமிழர்களைத் திருப்பியனுப்புவது. மூன்றாவது, வட - கிழக்குப் பயங்கரவாதத்தை முடிவுக்குகொண்டுவருவதாகும். தெற்கின் சிங்கள பயங்கரவாதத்தை ஆட்சியாளர்கள் மிகவும் கடுமையான முறையில் அடக்கி ஒடுக்கினர். எனவே, வடக்கின் பயங்கரவாதத்தை தீர்ப்பதற்கு மட்டும், பேச்சுவார்த்தைகள் அவசியமா? எனவும் அக்கட்டுரையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ■

# வடக்கிற்கு அனுப்பிய பணம் தெற்கில் உபயோகம்

பிரித்தானிய அரசாங்கத்தால், வடக்கில் ஊனமுற்றவர்களின் புனர்வாழ்வுக்கென அனுப்பிவைக்கப்பட்ட பெருந்தொகை பணம் கொழும்பில் உள்ள ஜெய்பூர் நிறுவனத்தின் தலைமைக்காரியாலய நிர்வாகப் பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் பிரித்தானிய அரசாங்கம் வடபகுதியில் இடம்பெறும் யுத்த நடவடிக்கையால் பாதிப்படைந்துள்ள பொதுமக்களின் புனர்வாழ்வுக்கென மூன்று மில்லியன் ரூபா பணத்தை அனுப்பியிருந்தது.

இப்பணத்திலிருந்து சிறிய தொகை மட்டுமே, யாழ். ஜெய்பூர் நிறுவன செயலகத்தை வந்தடைந்துள்ளது. மீதிப்பணத்தை தெற்கில் உள்ளவர்களின் தேவைக்கு பயன்படுத்திவிட்டதாக, இந்த நிறுவனத்தின் கொழும்பு தலைமைக்காரியாலயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இங்கு அனுப்பிவைக்கப்பட்ட சிறிய தொகைப் பணத்திற்கு பெறுமதியான பொருட்கள் யாழ். அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அப்பொருட்கள் யாவும் செயற்கை உறுப்புக்கள் செய்வதற்கு உகந்தவையல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழீழத்திற்கு சமனானது

## ஜலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளை இன அடிப்படையில் இணைத்து, கட்டுப்பாடில்லாத அதிகாரங்களை வழங்கினால், அது தமிழீழம் வழங்குவதற்கு சமனாகிவிடுமென ஜலண்ட் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

ஒரு தலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனத்தை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வெளியிடவும், இது வழிகோலும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிறீலங்காவின் சிங்களக் கட்சிகளில் எதுவென்றாலும் ஈழத்தை ஏற்றுக்கொண்டால், இலங்கை துண்டுபோடப்பட்ட நாடாகும் எனவும், எல்லைகள் தென்பகுதி நோக்கி தள்ளப்படும் எனவும், புலிகள் முழுமையான ஆயுதபலம் உள்ளவர்கள் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தமிழீழம், தன்னாட்சியும் இறைமையும் பெற்றுக்கொண்டு வருவதால், சிறீலங்காவின் ஆயுதப்படைகள் அதனுள் ஆக்கிரமித்துச்செல்ல சர்வதேச சமூகம் அனுமதிக்காது. சிறீலங்காவின் தேய்வில், தமிழீழம் விரிவாக்கம் அடைந்துவருகின்றது எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. ■

# காரைநகரில் வீடுகள் படையினரால் தகர்ப்பு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறீலங்காப் படையினர், அங்குள்ள வீடுகளை குண்டு வைத்து தகர்த்துவருவதாக தெரியவருகின்றது.

காரைநகரில் சிறீலங்கா இராணுவத்தினரின் பிடியில், சிக்கியுள்ளவர்கள் தமது உறவினர்களுக்கு அண்மையில் எழுதிய கடிதமொன்றில், தமது உறவினர்களுக்கு இந்நிலைமையை எழுதியுள்ளனர்.

சிலர் கொழும்பில், இருந்து காரைநகரிற்கு புறப்பட்டுச் சென்றவர்கள், தமது வீட்டைப் பார்க்கச் சென்றசமயம் அங்கு தமது வீடுகள் உடைக்கப்பட்டு, வீட்டின் குசினிகளே எஞ்சியிருந்ததைக்கண்டு அதிர்ந்துபோயினர். ■

*** * எம் எதிர்கால சந்ததி வாழ நிச்சயமாக, எமக்கோர் நாடு அவசியம். இல்லாவிட்டால் எங்களைப்போல்தான் நாளை எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும்.**

*** * லெப். கேணல் திலீபன்**

# காஷ்மீர் - இந்தியாவின் இரண்டாவது தமிழீழம்

## காஷ்மீர் மக்கள் மீது இந்தியா தொடுத்துள்ள நான்காவது போர்

தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் இந்தியப்படை தரித்து நின்றபோது, என்னென்ன வதைகளை கட்டவிழ்த்துவிட்டதோ அவையெல்லாம் இன்று மீண்டும் காஸ்மீரில் அரங்கேறுகின்றன. தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின் கடந்த நான்கு ஆண்டுகளாக காஸ்மீரில் பரவி நிற்கும் நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய பாதுகாப்புப் படையினர் செய்யும் வதைகள் இன்று உலகப் புகழ் பெற்றவை. எனவே, இவை எதிர்பார்த்த பலனைத் தராதது மட்டுமன்றி, பாதகமான விளைவுகளை இப்போது ஏற்படுத்தத் தொடங்கிவிட்டன. மோசமான மனச்சோர்வால் பீடிக்கப்பட்டிருக்கும் இந்தியப் படையினர் குறிப்பாக B. S. F. எனப்படும் எல்லைப் பாதுகாப்புப் படையினர், எடுத்ததுக்கெல்லாம் மக்களைக் கொல்வது வழமையாகிவிட்டது. அண்மையில் பியுபோரா எனுமிடத்தில் நடைபெற்ற 40 பொதுமக்கள் கொல்லப்பட்ட படுகொலைச் சம்பவம் ஏற்படுத்திய கண்டனக் கணைகளை இந்திய அரசால் தாங்கவே முடியாமல் போயிற்று. எனவே, இப்போது டெல்லி அதிகாரபீடம் கதையை மாற்றுகிறது. நாடகத்தின் அடுத்த காட்சி இப்போது அரங்கேறத் தொடங்கிவிட்டது. எனவே, இப்போது செய்தித் தொடர்பு சாதனங்களில் -செய்தி இதழ்களில் பெருமெடுப்பில் காஸ்மீர் மக்களின் மனித உரிமைகள் பற்றி கவலை தெரிவிக்கப்படுகிறது. மனித உரிமைமீறல் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. சில படையினரும் தண்டிக்கப்படுகின்றனர்.

### இந்திய அரசின் தந்திரோபாய அணுகுமுறை

அதேசமயம், இன்னோர் தந்திரோபாய அணுகுமுறையையும் கடைப்பிடிக்கின்றது இந்திய அரசு. காஸ்மீர் போராளிகளிடையே கடும்மோதல் என்றும் - மக்கள் போராளிகளை வெறுக்கத் தொடங்குகின்றனர், அவர்கள் சனநாயக வழிகளில் ஆர்வம் காட்டுகின்றனர், எனவே, சனநாயக அரசியலைப் புகுத்த காலம் கனிகிறது என்றும், நாள்தோறும் அறிக்கைக்கு மேல் அறிக்கையாக விடப்படுகிறது. காஸ்மீரின் இன்றைய நிலைக்கு பாக்கித்தானே காரணமென்றும் சனநாயகத்தை போராளிக்குழுக்கள் குழிதோண்டி புதைப்பதாகவும் கூறும் இந்திய அரசின் உண்மை நிலை என்ன? காஸ்மீர் மக்களின் சனநாயக உரிமைகளைப் பறித்து, அவர்களின் அழகிய பள்ளத்தாக்கில் அமைதியான வாழ்வில் நெருப்பை அள்ளிக் கொட்டியவர்கள் யார்? இந்த உண்மை எல்லாம் வெளித்தெரியாவண்ணம் இன்று இந்தி அரசு மேற்கொள்ளும் பிரசாரம், ஒரு நாள் இறுதியில் பெரும் சிக்கலில் இந்தியாவை மாட்டிவிடப் போகின்றது என்பதை, இப்பிரச்சினைகள் மாறான விளைவுகளையே ஏற்படுத்திவிடும் என்பதை, தமிழீழத்தை உதாரணம் காட்டி இன்று இந்திய அரசுக்கு நேர்மையான அரசியல் ஆய்வாளர் சிலர் இடித்துரைக்கின்றனர். ஆனால், இவற்றையெல்லாம் காதில் போட டில்லி ஆளும் வர்க்கம் தயாராக இல்லை. அன்றிலிருந்து இன்று வரை, ஒரு நேர்மையான அரசியல் அணுகுமுறையை, தான் காஸ்மீரில் கடைப்பிடிக்கவில்லை என்பதையும் அதனாலேயே அங்கு விடுதலைப் போராட்டம் முனைப்படைந்தது என்பதையும் ஏற்க இந்திய அரசு மறுப்பது மட்டுமன்றி, இப்போது மேலும், தொடர்ந்து பல குறுக்கு வழிகளையே கையாள முயல்கிறது.

### இயக்க மோதலைத் தூண்டும் இந்திய அரசு

குறிப்பாக காஸ்மீர் விடுதலை தொடர்பாக இரு வேறுபட்ட நிலைப்பாடுகளைக்கொண்டுள்ள இரு வேறு அமைப்புகளிடையே மோதல்களை மூட்டிவிடுவதில் இந்திய அரசின் முழுக்கவனமும் இப்போதுள்ளதாகக் கூறப்படுகின்றது. அண்மைக்காலமாக இத்தகைய குழு மோதல்கள் அங்கு நடக்கத் தொடங்கியிருப்பதும், இங்கே குறிப்பிடப்படவேண்டிய செய்தி ஆகும். 1980 இலிருந்து இயங்கிவரும் இசுலாமியமத தீவிர தன்மையற்ற காஸ்மீரின் விடுதலையை முன்வைத்துப் போராடிவரும் J. K. L. F. எனப்படும் ஜம்மு -காஸ்மீர் விடுதலை முன்னணிக்கும் இசுலாமிய அடிப்படைவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஜமாதி இசுலாமியாவின் (Jamait -e -Islami) இராணுவப் பிரிவான கிஸ்புல் முஜாகுதீன் (Mizbul Mujahedin) அமைப்பிற்கும் மோதலை மூட்டிவிடுவதே இந்திய உளவு அமைப்புக்களின் முழுநேரப் பணியாகவுள்ளது. ஏனென்றால், ஜம்மு-காஸ்மீர் பகுதி விடுதலையைப் பெற்று பாக்கித்தானோடு சேரவேண்டும் என்கின்ற கிஸ்பி அமைப்பிற்கே, தற்போது பாக். அரசு முழு அளவில் உதவி வழங்குவதும் -காஸ்மீர் மக்களுக்கு பாக்கித்தானோடு இணைவதைத் தவிர வேறு தெரிவில்லை என பெனாசீர் அம்மையார் அடிக்கடி கூறிவருவதும் மோதலை மூளப்பண்ண சாதகமாகிவிடுகின்றது. அத்தோடு, கிஸ்புல் அமைப்பின் வளர்ச்சி காரணமாகவும் பாக்கித்தானின் உதவி குறைந்ததாலும் J. K. L. F. அமைப்பு சற்று இப்போது தளர்ந்திருப்பதும் உண்மையே.

எனவே, முனைப்படைந்துவரும் காஸ்மீர் மக்களின் போராட்டத்தை திசை திருப்ப, பேச்சு வார்த்தைகட்கு தான் தயாரென கூறியது மட்டுமன்றி, கடந்த 4 வருட காலமாக இந்திய சிறையிலிருந்த J. K. L. F. அமைப்பின் மூத்த தலைவரான முகம் 'மது யாசின் மாலிக் (Malik) என்பவரை அவரது மோசமான உடல்நிலை கருதி விடுவித்தும் விட்டது. இவருக்கு மேல், இந்திய விமானப்படை அதிகாரிகளைக் கொன்றமை, மத்திய அமைச்சர் மகளொருவரை கடத்தியது என பல குற்றச்சாட்டுகள் முன்னர் சுமத்தப்பட்டிருந்தன. இவரை விடுவித்த கையோடு, சனநாயக வழிமுறைகளை காஸ்மீரில் புகுத்தப் போவதாகக் கூறியமை, இயக்க மோதல்கட்கு இப்போது வழிவகுக்கவே என்பது தெளிவாகிவிட்டது. இந்திய அரசின் கைக்கூலிகள் என யாசின் மாலிக்கை வருணித்த சில பாக். ஆதரவு அமைப்புகள் அவரை இரு தடவை கொலை செய்ய முயன்றன. அவரது முக்கிய ஆதரவாளர் பலர் இப்போது கொல்லப்படுகின்றனர். அதேசமயம் J. K. L. F. தரப்பிலிருந்தும் பாக்கித்தானை கண்டித்து கடுமையான அறிக்கைகள் வெளியாகின. இவ்வாறாக நிலைமைகளில் சிக்கல் தோன்றத்தொடங்கின.

### இயக்க மோதலைத் தவிர்க்க முயற்சிகள்

எனினும், காஸ்மீரின் பல தரப்பட்ட அரசியல் அமைப்புகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் மூத்தோர் அமைப்பான குரியத் மாநாட்டு அமைப்பிற்கு (Huriyat Conference) நிரம்பிய செல்வாக்குண்டு. அவர்கள் இயக்க மோதல்களைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய மோதல்கள் போராட்டத்தைத் திசை திருப்பும் என்பதை உணர்ந்த மாலிக்கும் சமரசப் போக்கையே கடைப்பிடிக்க விரும்புவதாகத் தெரிகிறது. கிஸ்புல் அமைப்போடு நல்லுறைவைப் பேணப் போவதாகக் கூறும் அவர், பாக்கித்தானைக் கடுமையாக விமர்சித்த தனது கட்சிப் பேச்சாளரை பதவியிலிருந்து நீக்கிவிட்டார். அது மட்டுமின்றி இந்தியாவோடு எப்போதும் காஸ்மீர் சேர்ந்திருந்தது கிடையாது என்றும், நிபந்தனைகளற்ற பேச்சு வார்த்தைகள் என்றாலேயே இந்தியாவோடு பேசமுடியும் என்றும், காஸ்மீர் மக்கள் தமது வாழ்விற்கான போராட்டத்தை வீறுடன் தொடருவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவை இப்போதைய நிகழ்வுகள். ஆனால், அழகு கொழிக்கும் அமைதிப் பூங்காவாக இருந்த காஸ்மீர் பள்ளத்தாக்கை, பிணங்கள் குவியும் மரணப் பள்ளத்தாக்காக இந்தியா எவ்விதம் மாற்றியது? சனநாயக மரபுகள் அங்கு எவ்விதம் குழிதோண்டி புதைக்கப்பட்டன என்பதும் நாம் இங்கு ஒரு தடவை மனம்கொள்ளவேண்டிய செய்திகளாகும்.

இந்தியா இப்போது காஸ்மீர் மக்கள் மீது தொடுத்துள்ள போரை, 'நான்காவது போராக' சில வரலாற்றாசிரியர்கள் வர்ணிப்பர். இந்தியாவின் முதலாவது போர் என்பது கபடத்தனமான முறையில் ஜம்மு-காஸ்மீர் பகுதி இந்தியாவோடு இணைக்கப்பட்டதைக் குறிக்கும். 1947 ஆம் ஆண்டளவில் காஸ்மீர் பகுதியை ஆண்டுவந்த இந்து மகாராசாவான கரிசிங் என்பவர் தனது மேலாண்மைக்கு எதிராக வடமேற்கு எல்லை மாநில பூர்வீக மக்கள் படையெடுப்பு நடத்த முற்பட்டபோது, இந்திய இராணுவத்தின் உதவியை நாடினார். இத்றகுப் பதிலாக நேரு தந்திரமான முறையில் ஜம்மு -காஸ்மீர் பகுதியை இந்தியாவோடு இணைக்கக்கூடிய வழியைக்கொண்டுள்ள உடன்பாடு ஒன்றினைச் செய்துகொண்டார். அப்போது, அப்பகுதியின் தனித்துவம் பாதுகாக்கப்படும் என்றும் அவரால் கூறப்பட்டது. இவ் உடன்பாட்டையே காரணம் காட்டி சட்டரீதியாகக் காஸ்மீர் பகுதி தன்னுடையது என்று இந்தியா கூறிவருகிறது. ஆனால், சர்வதேச சட்ட வல்லுநர் கருத்துப்படி அவ்வாறாக ஆட்சி அதிகாரம் கைமாற்றப்படமுடியாது என்பதாகும். அத்தோடு, பெரும்பான்மை மக்களான முஸ்லிம் மக்களின் விருப்பம் அறியப்படாததோடு இன்று இருப்பது போல் அன்று ஜம்மு-காஸ்மீர் பகுதி நிருவாக ரீதியில் ஒன்றிணைக்கப் பட்டதாகவோ பொதுத் தன்மை கொண்டவொரு புவியியல் பிரதேசமாகவோ இருக்கவில்லை. அதுமட்டுமன்றி மன்னராட்சிக் கைமாற்றத்தை அப்போதைய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சேக் அப்துல்லாவிடமே கையளிக்கப்படத் தக்கதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பின்னர், ஜம்மு -காஸ்மீர் பகுதிகள் தனித்துவத்தைப்பேணும் வகையில் அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தியாவின் ஏனைய மாநிலங்களைவிட, கூடுதல் அதிகாரம் கொண்டதாக இந்திய அரசின் சட்டங்களை ஜம்மு-காஸ்மீர் நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டாலே, அப்பகுதியில் அவை நடைமுறைக்குவரும் என்கின்ற விசேட ஏற்பாடுகளைக்கொண்டதாக விசேட பிரிவாக இலக்கம் 377 என அரசியல் யாப்பிலேயே பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் வழி வகுக்கப்பட்டது. ஆனால், இவையெல்லாம் பின்னர் காற்றில் பறக்கவிடப்பட்டன.




இந்தியாவின் இரண்டாவது போராகக் கூறப்படுவது, பாக்கித்தான் 1965 ஆம் ஆண்டளவில் படையெடுத்து, காஸ்மீரின் ஒரு பகுதியை தன்னோடு இணைத்தபோது ஏற்பட்டது. மூன்றாவது போராகக் கருதப்படுவது காஸ்மீர் மக்களுக்கு, முன்னர் நேருவால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை இந்திய அரசு மீறியபோது, காஸ்மீர் மக்கள் கிளர்ந்தெழுந்தபோது அவர்கள் மேல் ஏவப்பட்ட அடக்குமுறைகளைக் குறிக்கிறது. 1989 -1990 ஆண்டுகளிலேயே இவ் அடக்குமுறைகள் உச்சம்பெற்றன. 1983 -1984 இன் பின்னர், இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தின்போது காஸ்மீர் தொடர்பான தமது கொள்கையை இந்திய அரசு மாற்றியது. அதுவரை சேக் அப்துல்லாவின் மகன் பருக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியுடனான தனது உடன்பாட்டை முறித்த இந்திரா காந்தி அம்மையார், காங்கிரஸ் கட்சி நலன்களை முன்வைத்து, குறுகிய நோக்கில் செயற்படத் தொடங்கினார்.

அதுமட்டுமன்றி, ஜம்மு -காஸ்மீர் பகுதியில் சிறுபான்மையாக இருந்த இந்து மதத்தைச் சார்ந்தோரிடம் தமது செல்வாக்குத் தளத்தை உருவாக்க முயன்று, மதபேதத்தை உருவாக்கினார். பின்னர், யாப்பின் 370 பிரிவானது தூக்கிவீசப்பட்டது. நேரடியாக ஆளுனர் ஆட்சி முறைகொண்டுவரப்பட்டது. ஓய்வுபெற்ற பாதுகாப்புப்படை அதிகாரிகளைக்கொண்டு அடக்குமுறை ஆட்சியொன்று அங்கே அரங்கேற்றப்பட்டது. இதுவே, மூன்றாவது போராகிறது.

இதன் பின்னரே நிலைமைகள்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

> "காஷ்மீரில் ஒரேயொரு தேர்தல் மட்டுமே நடக்க முடியும், அது காஷ்மீரின் விடுதலைக்காக மட்டுமே இருக்கும்."
>
> - ஜே.கே.எல்.எப்.தலைவர் ஒருவரின் கூற்று.

# ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்த மைந்தன்

**15.09.1987 காலை மணி 8. 30, தமிழீழப் போராட்ட வரலாற்றில் வைரத்துரிகை கொண்டு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தியாக நாள். ஆம்: தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும், தமிழினத்தின் விடிவெள்ளியுமாகிய லெப். கேணல் திலீபன் (இராசையா பார்த்தீபன்) அவர்கள், நல்லூர் வடக்கு வீதியிலுள்ள 'கந்தன் கருணை' இல்லத்தின் முன், அமைதிப்படை என்ற பெயரில் வந்த, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அறப்போர் தொடுத்த பொன் நாள்.**

இந்நாளில் தான் திலீபன் அவர்கள் தமிழீழ மக்களினதும், தமிழர் தாயகத்தினதும் இழந்த உரிமைகளை மீட்கும் நோக்கமாக, இந்திய அரசாங்கத்தினதும், இந்திய மக்களினதும் கவனத்தை ஈர்க்கும் வகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான ஐந்து கோரிக்கைகளை முன் வைத்துச் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை 'புனர்வாழ்வு ' என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில், ஊர்காவற் படை என அழைக்கப்டுவோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்கிராமங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் குடி கொண்டுள்ள இராணுவ பொலிஸ் நிலையங்கள் மூடப்படல் வேண்டும்.

ஆகியனவே விடுதலைப் புலிகளினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளாகும்.

இக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று, விடுதலைப் புலிகளினால் 13. 09. 1987 அன்று இந்தியத் தூதுவரின் கையில் நேரடியாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட்டது. அவரின் பதிலுக்காக 24 மணித்தியால அவகாசமும் கொடுக்கப்பட்டது. ஆனால் 15. 09 1987 வரை தூதுவரிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அதனாலேயே சாகும் வரை உண்ணாவிரதமும், மறியல் போராட்டமும் நடாத்துவதாக விடுதலைப்புலிகளினால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரமே திலீபனின் தியாகப் பயணம் ஆரம்பித்தது.

இந்திய வல்லாதிக்கத்தின் கண்களைத் திறப்பதற்காக திலீபன் மேற் கொண்ட அத் தியாகப் பயணத்தில் 12 நாட்கள் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல், தன்னை வருத்தி தமிழ் பேசும் மக்களின் விடுதலைத் தீயைக் கொழுந்து விட்டு எரியச் செய்த வேளையில் 26. 09. 1987 அன்று, ஈக(தியாக)ச் சாவு அடைந்தார் என்பது, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றின் முக்கிய பதிவுகளில் ஒன்றாகும். அதுவே ஜனநாயகத்தின் காவலன் என்று தன்னைப் பெருமைப் படுத்திக் கொண்ட, கொள்கின்ற இந்திய அரசின் கறை படிந்த வரலாறாக மாறியது.

அகிம்சைப் போராட்டத்திற்கே ஆணிவேராகத் திகழ்ந்த அண்ணல் காந்தி அடிகள் கூட, தனது உண்ணாவிரதப் போராட்டங்களை நீராகாரம் அருந்தித் தானே நடத்தினார். ஏன்? ஐரிஸ் போராட்ட வீரன் 'பொபி சாண்ட்ஸ்' கூட நீராகாரம் அருந்தித் தான், சிறைக்குள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டார். ஆனால் நம் தியாக மைந்தனோ, நல்லூர்க் கந்தன் வீதிகள் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிய, மக்கள் எல்லோரும் கண்ணீர் சிந்தியபடி விழித்திருக்க, மருத்துவ வசதிகளையும் ஏற்காது நீரும் அருந்தாது உண்ணாவிரதம் இருந்து, உலகில் புதிய அத்தியாயமொன்றை சிருஸ்டித்து விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல, எம் இனத்திற்கே பெருமை சேர்த்தார்.





திலீபனின் தியாகப் பயணத்தினால், மக்கள் புரட்சியொன்று வெடித்தது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் ஆயுத மிரட்டலுக்கெதிராக, இவ் உண்ணாவிரத நிகழ்வு, தமிழீழ மக்களை விழிப்படைய வைத்தது. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான எழுச்சியை வளர்த்தது. திலீபனின் அறப் போராட்டத்திற்கு முன் இந்திய இராணுவமும் இந்திய அரசும் தோல்வி கண்டன. இந்திய இராணுவத்திற்கெதிரான மக்களினது போராட்டம் வெற்றி பெற, திலீபனின் 12 நாள் இறுதிப்பயணங்கள் உறுதுணையாக நின்றன.

திலீபனின் அறப்போராட்டமானது, தமிழீழம் எங்கும் பரவி புரட்சிகரமான உணர்வலைகளை தோற்றுவித்தது. குறிப்பாக படுகொலைக்கெதிராக அன்னையர் முன்னணி கொதித்தெழுந்தது. "மக்களுக்காக நான் மரணிக்கத் தயார்" என்று முழக்கமிட்டு அதனை நிருபித்துக் காட்டிய திலீபனின் வழியில், அன்னை பூபதியும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து 31 ஆம் நாள், தமிழீழ மண்ணுக்கு வித்தானார் என்பதும், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றின் முக்கிய பதிவாகும். இந்தியப் படைகளின் ஆயுத மிரட்டல்களின் மத்தியிலும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்..... என்ற திலீபனின் கனவை அன்னை பூபதி அவர்கள் நனவாக்கிப் பெருமை சேர்த்தார். திலீபன் விட்டுச் சென்ற பணிகளை தமிழீழ மக்கள் ஒன்றிணைந்து சுமக்கத் தொடங்கி விட்டனர். அன்று வெடித்த மக்கள் புரட்சியானது, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவ வெளியேற்றத்துடன் மட்டும் நின்று விடவில்லை. சிறீலங்கா இராணுவத்துடனான 2ம் கட்ட ஈழப் போரில் அது புயலாக வீசி வருகின்றது. ■

## திலீபனின் மறைவைத் தொடர்ந்து தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தி பின்வருமாறு -

'எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள் ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது, வியக்கத்தக்கது, எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்?எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் மண்ணுக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த, உன்னத தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம். ■

## திலீபன் ஒரு இலட்சிய நெருப்பு

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடி துடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியில் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருசனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதுவர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும், எமது மக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப்பூமியில், தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் -இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி, நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும், மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்குப் பொறுப்பளித்தோம். ■


- தமிழீழத் தேசியத் தலைவர்

# உணவுக்காக ஒரு 'ஒப்பரேசன்'

**1988-** மணலாற்றுக் காடு. முப்பதினாயிரம் இந்திய சிப்பாய்கள் இட்ட இராணுவ முற்றுகையை முறியடிக்க ஒரு சில ஆயிரம் புலிவீரர்கள், தலைவரின் நேரடிக் 'கொமாண்டின்' கீழ் ஜீவமரணப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருந்த நேரம்....

காட்டிற்குள் இருந்த புலிவீரர்களது பல முகாம்களுக்குள் இந்தியப் படைகள் புகுந்துவிட்டன.

ஒருபுறம் போர் நடைபெற்ற அதேவேளை, மறுபுறம் அவசர அவசரமாகப் புதிய முகாம்கள்



அமைக்கப்பட்டன; புதிய கிணறுகள் வெட்டப்பட்டன.

தலைவரது முகாமுக்குள்ளும் இந்தியப்படை புகுந்துவிட்டது.

தலைவரும் இடம் மாறி -இடம் மாறிப் போரை வழிநடாத்திக் கொண்டிருந்தார். காடெங்கும் இந்தியப் படைகள் நின்று எமது வெளித் தொடர்புகளைத் துண்டித்ததாலும், எமது முகாம்கள் பலவற்றை இந்தியப் படைகள் பிடித்துவிட்டதாலும், காட்டுக்குள் உணவுத் தட்டுப்பாட்டால் பெரும் நெருக்கடி உருவானது.

காட்டுக்குள் இருந்த பல உணவுச் சேமிப்பு நிலையங்களை இந்தியப் படைகள் அழித்துவிட்டன. அவசர நிலைமைகளின் போது பயன்படுத்தும் நோக்குடன், சில இரகசிய உணவுச் சேமிப்பிடங்கள் முன்னரேயே காடெங்கும் நிறுவப்பட்டிருந்தன. அதாவது, பாரிய மரங்களின் உச்சியில் உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில், அந்த உணவு வைப்பகங்கள் மறைந்திருந்தன.

இலுப்பை மரத்தில் குடியிருக்கும் வெளவால்களைப் போல, அந்த நேரத்தில் மணலாற்றுக் காட்டுக்குள் இந்தியப் படை முகாம்கள் இருந்தன.

இப்படியான படைமுகாம்கள் சிலவற்றுக்குள் இரகசிய உணவு வைப்பகங்களைத் தாங்கி நிற்கும் மரங்களும் இருந்தன. அந்த மரங்கள் இந்தியப் படை முகாம் எல்லைகளுக்குள் இருந்தாலும் இந்தியர்கள் அதைக் கண்டு பிடிக்கவில்லை.

சண்டை தீவிரமடைந்தது. உணவு இல்லாமலே போகும் நிலை உருவானது.

சிறிதளவு அரிசியையும், சிறிதளவு பருப்பையும் தவிர வேறு ஒன்றும் இல்லை; உப்பு உட்பட, அரிசியையும் பருப்பையும் ஒன்றாகப் போட்டு அவித்து தலைவர் உட்பட எல்லோரும் அதையே உண்டு பசியாற்றினர்; பசியாற்றினர் என்பதைவிட போராடுவதற்காக உண்டனர் என்பதே பொருத்தமாக இருக்கும். "உப்பில்லாப் பண்டம் குப்பையில் என்பர் -'செக்மேற்'றின் போது மணலாற்றுக் காட்டுக்குள் நிற்காதவர்."

இவ்விதம் திருக்குறள் பாணியில் அந்தச் சூழலை விளங்கப்படுத்தலாம். உணவு இல்லை என்பதற்காக இந்தியப் படைகளிடம் மண்டியிட முடியாது; அதே வேளை உணவு இல்லாமல் போர் புரியவும் முடியாதே.

> **"இது ஆயுதங்களைக் கைப்பற்றி, எதிரிப்படைகளைக் கொல்வதற்கான திட்டமல்ல. எதிரிப் படை முகாமுக்குள் சிக்கிய உணவுப் பொருட்களை மீட்டெடுத்து, போராளிகளுக்கு உணவு ஊட்டுவதற்கான ஒரு தாக்குதலே ஆகும்".**

நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று தலைவர் சிந்தித்தார். எப்படியாவது உணவைப் பெற்றேயாக வேண்டும் என்று அவர் முடிவெடுத்தார்.

அப்போது தலைவர் அவர்கள் ஒரு தாக்குதல் திட்டத்தைத் தீட்டி, அதற்கான தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டார்.

இது ஆயுதங்களைக் கைப்பற்றி, எதிரிப் படையினரைக் கொல்வதற்கான திட்டம் அல்ல. உணவுப் பொருட்களை மீட்டெடுத்து - போராளிகளுக்கு உணவு ஊட்டுவதற்கான ஒரு தாக்குதலே ஆகும்.

அந்தத் தாக்குதல் திட்டத்திற்குப் பெயர் எதுவும் இடப்பட்டிருக்கவில்லை. ஆனால், 'ஒப்பறேசன் அரிசியும்பருப்பும்' என்று பெயரிட்டிருக்கலாம். இந்தத் தாக்குதல் வெற்றியில்தான் பட்டினியை எதிர் நோக்கியிருந்த பலநூறு புலிவீரர்களது உயிரே தங்கியிருந்தது. தலைவர் தீட்டியிருந்த திட்டத்தை அவரே போராளிகளுக்கு விளக்கினார்.

திட்டம் இதுதான்.

காட்டிற்குள் இந்தியப்படை அமைந்திருக்கும் ஒரு தற்காலிகப் படைமுகாம் ஒன்றிலுள்ள ஒரு காவலரணுக்கு அருகில் இருக்கும் மரத்தின் மேல், இரகசிய உணவு வைப்பகம் ஒன்று இருந்தது.

அதை சண்டையில்லாமலே வெற்றிகரமாக எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

அதெப்படி!

பகலில் சென்று மரத்தில் ஏறினால், அரிசி மூடையோ பருப்பு மூடையோ வராது; உடல் மூடைதான் வரும். குருவி சுடுவதுபோலகாவலரணில் இருக்கும் இந்தியச் சிப்பாய் சுட்டுத்தள்ளிவிடுவான்.

அப்படியாயின் இரவு முயற்சிக்கலாமே!

கன்னங்கரிய வன இருளில் மரங்களால் நிறைந்த சமுத்திரத்துக்குள் குறித்த மரத்தைத் தேடிப் பிடிப்பது எப்படி?

இந்தச் சிக்கலை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயத்தையும் தலைவரே விளக்கினார்.

முதலில், இருளத் தொடங்கு முன் நீளமான ஒரு கயிற்றுடன் ஒரு போராளி இரகசியமாக ஊர்ந்து சென்று, குறித்த உணவு வைப்பக மரத்தின் அடியைச் சுற்றி கயிற்றைக் கட்டிவிட வேண்டும்.

கட்டியபின் சென்ற பாதை வழியே கயிற்றை இழுத்துக் கொண்டு திரும்பி வந்து படை முகாம் எல்லைக்கு வெளியில் உள்ள ஒரு மரத்தில் கட்ட வேண்டும்.

இரவாகிய பின், முதலில் இருவர் கயிற்றைப் பிடித்துச் செல்வதன் மூலம், உணவு மூடைகள் இருக்கும் மரத்தை இனங்கண்டு கொள்ள முடியும்.

பின்னர் மெதுவாக மரத்தில் ஏறி, சத்தமில்லாமல் சிறுசிறு பொதிகளாக மூடைகளைப் பிரித்துக் கட்டி, நீண்ட கயிற்றின் மூலம் சந்தடியில்லாமல் கீழே இறக்கிவிட வேண்டும். இறக்கப்பட்ட பொதிகளைத் தூக்கியவாறு, கயிற்றை வழிகாட்டியாகக் கொண்டு ஏனைய போராளிகள் வெளியே கொண்டு வரவேண்டும். இவ்விதம் வெற்றிகரமாகக் கொண்டு வந்தும் விட்டனர்.

இந்தத் திட்டத்தின்படி போராளிகள் அனைவருக்கும் சில நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் கிடைத்துவிட்டன.

செக்மேற்றை முறியடிக்க நடந்த சண்டைகளின்போது, இடம் பெற்ற பல்வேறு சாதனைகளில் நிச்சயமாக இதுவும் ஒன்று. ■

---

## தென் தமிழீழ இரவுகள்

அமைதியாய்க் கிடந்தது அன்றைய இரவு
குடிசைகளின் கதவுகள் அடைக்கப்பட்டபடி
ஆனாலும் பதற்றத்தோடு....

நாய்களின் ஊளை இடை நடுவே
தூக்கத்தைக் கலைத்தது
எழுந்து கதவருகே போக,

எட்டத்தில் ஏதோ முனகல்
இடையிடையே உறுமிய வாகனங்களின்
இரைச்சல்....

சப்பாத்துக் கால்களின் சப்தங்களும்
கூடத்தான்....
முத்தாய் வியர்த்தது முகம்

மெல்லெனவே சாத்தப்பட்டது கதவுகள்
நடுக்கப்பில் சாய்ந்தபடியே,
நீண்ட பெருமூச்சுடன் அமர

சப்தங்கள் நெருங்கியது போலவொரு உணர்வு
உணர்வு மட்டுமல்ல உண்மையுந்தான்.
இளைஞனொருவனின் மரண ஓலந்தான்
சாய்ந்திருந்த என்னைத் திடுக்குறச் செய்ய,

ஓலைகளின் ஓட்டைகளினூடு
சற்று நேரத்தில்....
தீச்சுவாலையின் மஞ்சளொளி,
பொட்டுக்கால் பொட்டாய் தென்பட்டது
குரலும் ஓய்ந்தது
மீண்டும்

சப்பாத்துச் சத்தங்களின் இரைச்சல்
வாகனங்களின் உறுமல்.
தொலை தூரம் போய்ப்பின் மறைந்தது
விழித்துக் கொண்டது நான்மட்டுமல்ல,
ஏன் அயலவர்களுந்தான்.
எவருமே வாயிற்படியைத் தாண்டாமல்
வாயடைத்து நின்றது தான் உண்மை
நேரங்கள் யுகங்களாய் அன்றைய இரவு
மனதைக் கிளறும்,
நாளை என்னவோ, என்ற ஏக்கம்
"எதுக்கும் விடியட்டும்" என்ற
சொற்களால் என்னை அமைதிப்படுத்த
அமைதியின்றியே விழிகள் உருண்டன

விடிந்தது காலை
கதவுகள் தாண்டமுன்னே
"கருகிப் போன பிணமாம்"
கதை புரையோடியது
இது எனக்குத் தெரிந்ததுதான்,
இன்று மட்டுந்தானா?
நித்தமும். கதவுகள் திறக்கப்படும்
கழுத்துக்கள் நெரிக்கப்படும்,

யாருக்கு என்றுதான் கேள்வி
ஆனால்,
என்றோ ஒருநாள்
கதவுகள் திறக்கப்படும்
சுதந்திரக் காற்று சுவாசிக்கப்படும்
அதுவரை.....

நா. அன்பரசன்

# கேணல் கிட்டு சிறுவர் பூங்கா திறப்பு



'கேணல் கிட்டு'வின் உருவச்சிலைக்கு அவரது தாயார் மாலை அணிவித்தபோது...

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு அவர்களின் நினைவாக நல்லூர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, அண்மையில் உணர்வெழுச்சியுடன் திறந்துவைக்கப்பட்டது.

மங்கள இசை முழங்க, முதலில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

சிறுவர் பூங்காவை கிட்டு அவர்களின் அன்னையார் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.


பின்னர், கேணல் கிட்டு அவர்களின் உருவச்சிலையை அவர்களின் மனைவி சிந்தியா திரைநீக்கம் செய்துவைத்தார். இதன் பின்னர், சிலைக்கு அவர் மாலை அணிவித்தார்.

பின்பு, கிட்டு அவர்களின் சிலைக்கு சகோதரர் காந்திதாசன் மாலை அணிவித்தார்.

இதன்பிறகு, கேணல் கிட்டு அவர்களுடன் வங்கக் கடலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்கள், திரைநீக்கம் செய்யப்பட்டு, மாலைகள் அணிவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

முதலில் லெப். கேணல் குட்டிசிறியின் உருவப்படத்தை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்து மாலை அணிவித்தார். பிறகு வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெற்றோர்கள் உருவப்படங்களைத் திரைநீக்கம்செய்து, மாலை அணிவித்தனர்.

பின்னர் சங்கிலிய மன்னனின் சி!லைக்கு தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களால் மாலை அணிவிக்



'கேணல் கிட்டுவி'... கம்பீரமா...

# புதிய அரசும் யுத்தத்தை திணித்தால் தமிழீழம் உருவாவதை ...

### இரகசியப் பேச்சிற்கு இந்தியா முயன்றது

"அப்போது நானும் பாரியாரும் இந்தியா சென்று, பங்களூர் நகரில் தலைமறைவாக இருக்கின்றோம். அப்போது இந்தியா இரகசியமாக ஒரு பேச்சு நடத்த முயன்றது. இரண்டு வருடமாகியும் விடுதலைப் புலிகளை வெற்றிக்கொள்ள முடியவில்லை. இந்திய இராணுவத்திற்கு இது பெரிய இழுக்கு. சிறிய கெரில்லா இயக்கத்தை ஒரு இலட்சம் இந்தியப் படைகளால் அழிக்க முடியவில்லை என்ற அவமானத்தை இந்தியா எதிர்நோக்கியிருந்த நேரம். அச்சமயம் விடுதலைப் புலிகளுடன் இரகசியமாகப் பேச்சு நடத்தி, எப்படியாயினும் அப்போரை முடிவுக்குக்கொண்டுவந்து, விடுதலைப் புலிகள் இந்தியாவிடம் சரணடைந்துவிட்டார்கள் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தான் தப்பிக்க இந்தியா விரும்பியது. இந்நோக்கத்துடன், இந்திய அரசு இரகசியப் பேச்சை சென்னையில் ஆரம்பித்தது. கிட்டுவுடன் பேச்சுக்கள் நடந்தன. பேச்சை நடத்தியவர்கள் இந்தியப் புலனாய்வுத்துறையின் முக்கிய அதிகாரிகள். அப்போது கிட்டு என்னுடன் தொடர்புகொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், நான் வெளியே வந்தால் கஸ்டம். நான் இந்தியாவில் இருப்பது, இந்திய அரசுக்கு அப்போது தெரியாது. இரகசியமாக கிட்டுவை சந்திக்கவேண்டும். கிட்டுவுக்கு நாலாபுறமும் பொலிஸ் இருக்கிறது. நான் பொலிசின் கண்ணில்படாமல் சந்திக்கவேண்டும். பங்களூரிலிருந்து சென்னை சென்றேன். கிட்டுவின் வீட்டுக்கு சென்றால், அங்கு பொலிசார் ஒருவரையும் காணவில்லை. வீட்டின் பின்புறமாக நான் சுவர்களைக் கடக்கவேண்டும். நான் பாய்ந்து, கடந்துவந்தேன். கிட்டு என்னை மேல் மாடிக்கு அழைத்துச்சென்று, உரையாடினார். நான் அங்கு, வீட்டைச் சுற்றியுள்ள பொலிஸ் காவலை எடுத்துவிட்டார்களா என கிட்டுவை கேட்டேன், அதற்கு கிட்டு,

பொலிஸ் வீட்டிற்குள்தான் இருக்கின்றது. நான்வரும் நேரத்தை அறிந்துவிட்டு, வீடியோவில் எம். ஜி. ஆரின் படத்தைப் போட்டிருக்கிறார். பொலிஸ்காரர் அப்படத்தைப் பார்க்க உள்ளே வந்தமர்ந்துவிட்டனர். வெளியே எவரும் இல்லை. வெளியே ஓரிருவர் நின்றபோது, அவர்களை அழைத்த கிட்டு, முதலமைச்சர் எம். ஜி. ஆரின் படம் ஓடுகிறது. அதை பார்க்காவிட்டால், அவர் கோபிக்கமாட்டாரா எனக்கேட்டுள்ளார். அவர்களும் பயந்து, படம்பார்க்க உள்ளே வந்துவிட்டனர். இதன்பின்னே அவர் என்னை அழைத்துச் சென்று, மேல்மாடியில் வைத்து உரையாடினார். இப்படிப் பல தடவை நடந்தது. பேச்சுக்களின் போது 50 கோடி ரூபாவை எமக்குத் தருவதாகவும், பதிலாக வைத்திருக்கும் 700 ஆயுதங்களைத் தரும்படிகேட்டது. நாம் அதற்கு 50 கோடி ரூபாவினை உடனடியாகத் தரும்படியும் குறிப்பிட்டகால இடைவெளியில் அதனை நாம் வெளிநாட்டில் உள்ள எமது வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டபின்னர், ஆயுதங்களை ஒப்படைக்கின்றோம் என்றோம்.

ஆனால், இதனை சரணாகதியடைந்ததாகக் கருதக்கூடாது - போர்நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு, நாம் அதனை வழங்குவோம் என்றோம் -அதற்கு இந்திய அரசு மறுத்துவிட்டது -பேச்சுக்கள் முறிந்தவுடன், கிட்டு கைதுசெய்யப்பட்டார்.

### தூங்கிவழிந்த டி. பி.

இறுதியாகக் கொழும்பில், நாம் பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்தபோது, கிட்டு அங்கு வந்திருந்தார் -ஒரு கூட்டத்திற்கு நாம் சென்றிருந்தோம். அமைச்சர்களை அங்கு சந்தித்தோம் -அப்போது வயோதிபர் ஒருவர் அமைச்சர்களுடன் வந்தமர்ந்திருந்தார் - வேட்டியுடன் இருந்த அவர், மூலையில் நித்திரை செய்துகொண்டிருந்தார் -அப்போது கிட்டு என்னிடம் யார் அவர் கூட்டத்திற்குவந்து, நித்திரைகொள்கிறார் என்று அவரைக்காட்டிக் கேட்டார் -எனக்கும் அவரைத் தெரியாது -அருகிலிருந்த அமைச்சர் கமீத்திடம் இவர் யார் என்று கேட்டேன். அவர்தான் எங்களின் பிரதமர் டிங்கிரி பண்டா என்றார் -இப்படியான டிங்கிரி பண்டா இன்று யுத்தம் பற்றி பேசுகிறார்.



தொங்குபாலத்தை உள்ளடக்கிய பூங்காவின் அழகிய தோற்றமொன்று.

### தேர்தல் தீர்க்கதரிசனம் கடினம்

தேர்தல் வரப்போகின்றது. அரசியலில் தீர்க்கதரிசனம் கூறுவது கடினம். சிங்களக் கட்சிகள் எவையும் தமிழ் மக்களுக்கென சரியான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை. ஐ. தே. க. பகிரங்கமாக தனது இனவாத நிலைப்பாட்டை கூறுகின்றது. வடக்கு -கிழக்கை இணைக்க முடியாது எனக்கூறுகின்றது. ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தால், ஒரு யுத்தத்தை நடத்தி, வடபகுதியை இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதாக ஜனாதிபதி கூறுகிறார். சந்திரிகா தான் ஆட்சிக்கு வந்தால், புலிகளுடன் பேச்சு நடத்துவேன், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிப்பேன் எனக் கூறுகிறார். நல்ல விசயம் - அதை நாம் வரவேற்கின்றோம் - ஆனால், சந்திரிகா ஆட்சிக்கு வருவது சுலபமா? ஆட்சிக்கு வந்து புலிகளுடன் நேசக்கரம் நீட்டினால், அதற்குப் பின்னால் இனவாத தீவிரவாத சக்திகள் பேச்சுக்கள் நடக்கவிடுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது -

### பேச்சிற்குப் புலிகள் தயார்

என்றாலும் புலிகளாகிய நாம் பேச்சுமூலம் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் -பேச்சிற்கு புலிகள் தயார், போர் நிறுத்தம் செய்து, பேச்சு நடத்த தயார், என திரும்பத்திரும்ப கூறிவருகிறோம் -பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயார் -சமாதானக் கதவுகள் திறந்தேயுள்ளன என பலமுறை கூறியுள்ளோம் -இன்றுவரை சமாதானக் கதவுகளை மூடியதாக நாம் கூறவில்லை. இனிவரும் அரசு சந்திரிகாவின் அரசாக இருந்தாலென்ன, டிங்கிரியின் அரசாக இருந்தாலென்ன எம்முடன் பேச்சுநடத்த விரும்பினால், நாம் அதற்குத் தயார் - யுத்தநிறுத்தம் செய்ய விரும்பினால் நாம் அதற்குத் தயார். ஆனால் எப்படியான அரசு வரும், எப்படியான வழிமுறைகள் கையாளப்படப்போகின்றன - சமாதான சூழ்நிலை தோன்றுமா அல்லது யுத்த சூழ்நிலை தோன்றுமா என்பது அவர்களைப் பொறுத்தது. அதாவது யுத்தமா, சமாதானமா என்பது சிங்கள அரசியல் தலைமைகள் முடிவு எடுக்கவேண்டியவிடயம் -எம்மைப் பொறுத்தவரை நாம் எம் நிலைப்பாட்டில் தெளிவாக உள்ளோம் -பிரபாகரன் ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் சமாதானப் புறாவும் வைத்துள்ளார் - நாம் சமாதானத்திற்குத் தயார் - துப்பாக்கியை நாம் வைத்திருக்கின்றோம் என்றால், அது எமது தற்காப்பிற்காகவே -எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக சண்டையிடவும் நாம் தயாராக உள்ளோம் - ஐ. தே. க. ஆட்சிக்கு வந்தால், நிச்சயம் இராணுவத்தீர்வை அது முன்வைக்கும் -ஐ. தே. க. எம்மக்கள் மீது வலிந்து ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டால், அதை எதிர்த்துப் போராடும் சக்தியும் பக்குவமும் விவேகமும் எமக்குண்டு -

### யுத்தமும் தன்னாட்சியும்

யுத்தம் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முயன்றால், சிங்கள அரசுக்கும் சிங்களத் தேசியத்திற்



சிறுவர் பூங்கா... கலந்துகொண்ட ம...

# ...விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள்



...ருவச்சிலையினது ...தோற்றம்.

கப்பட்டது.

முன்னதாக மாலை 6.45 மணியளவில் மாநகரசபை தீயணைப்பு பிரிவிற்கு முன்பிருந்து, பொதுமக்களும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் ஊர்வலமாக பூங்காவை நோக்கிச்சென்றனர்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு' என்ற பாடல் நாதஸ்வரத்தில் ஒலிக்க ஊர்வலம் சென்றது -

மாலைவேளை சம்பிரதாயபூர்வமாக, உணர்வெழுச்சியுடன் திறந்துவைக்கப்பட்ட கேணல் கிட்டு சிறுவர் பூங்கா வர்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது -

இந்த நிகழ்விற்கு ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டுவந்து, பூங்காத் திறப்புவிழா நிகழ்விலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர் -

சிறுவர்கள் அலையலையாகத் திரண்டுவந்து, பூங்காவை புதிய உற்சாகத்துடன் பார்வையிட்டனர்.

பூங்காப் பகுதியில், சிறீலங்கா இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டாங்கி ஒன்று வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு இருநிமிடநேரம் மௌன அஞ்சலி அனுஸ்டிக்கப்பட்டு, தமிழ்த்தாய் வணக்கப்பாடலுடன், பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். ■



'கேணல் கிட்டு'வின் உருவச்சிலைக்கு அவரது துணைவியார் மாலை அணிவித்தபோது...

...கும்தான் பெரிய அழிவைக்கொண்டுவரும் -மிகவிரைவில் அது எமது தமிழீழத்தினை பிரகடனப் படுத்துவதாகவே அமைந்துவிடும் -அவர்கள் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து, தமிழ் மக்களின் சமாதானக் கயிற்றை அறுத்தெறிந்து, இனிவரப்போகும் சிங்கள அரசு யுத்தத்தை தமிழர்மீது கட்டவிழ்த்துவிட்டு, இன்வாதக் கொள்கையைக் கடைப்பிடிக்குமானால், அது நிச்சயமாகத் தமிழரின் தன்னாட்சி உரிமையைப் பெற்றிடும் ஓர் உரிமைப்போராக, தமிழரின் சுதந்திரப் போராக, தமிழரின் தனியரசை நிறுவும் ஒரு இலட்சியப் போராக மாறும் -அப்போரில் நிச்சயம் தமிழர் வெற்றிபெறுவர் என்பது ஒரு வரலாற்று உண்மையாகிவிடும். அதனை நாம் பொறுத்திருந்து பார்ப்போம் -

இன்னும் தேர்தலுக்கு நான்கைந்து நாட்கள்தான் உள்ளன - யார் ஆட்சிக்குவரினும் தமிழரின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்காமல், இந்த நாட்டில் நிம்மதி இருக்கப்போவதில்லை. சமாதானம் நிலவப்போவதில்லை.

எனவே, விடுதலைப் புலிகள் ஒருபுறம் அர்ப்பணிப்புக்களுடன், தியாகத்துடன் யுத்தத்தை நடத்திக்கொண்டிருந்தபோதும், மறுபுறம் சமாதானத்திற்காகவும், பேச்சுவார்த்தைக்காகவும் நேர்மையான, உண்மையான முயற்சிகளை எடுத்து வந்துள்ளனர். இம்முயற்சி எமது தளபதிகள் பலரை உயிரிழக்கச் செய்துள்ளது. திலீபன் முதல் குமரப்பா, புலேந்திரன், கிட்டுவரை பல தளபதிகளை சமாதான முயற்சிக்காக நாம் இழந்துள்ளோம். அன்றுமுதல் இன்றுவரை புலிகள் பேச்சுக்கான சமாதானக் கதவுகளை திறந்தே வைத்துள்ளனர்.

எமது சமாதான முயற்சிகளை நிராகரித்து எம்மக்கள் மீது, மண் மீது படையெடுக்க அரசு முற்படுமானால், அதன் பாராதூரமான விளைவுகள் இனி ஒருபோதும் சிங்கள இனத்துடன் ஒத்துப்போகாது. நாமே எமது தனியரசை அமைத்து, தன்னாட்சியுள்ள மக்களாக வாழ்வதைத் தவிர வேறுவழியில்லை. அரசு சமாதானத்தை விரும்பாது போரைத் தொடருமானால், தமிழரசை உருவாக்கியதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள் என்று சிங்களவர்களை வரலாறு சொல்லும்" என்றார். ■

## தங்க மேனி இந்தித் தீயில் வெந்து போனதோ...



தென்றல் தவழ்ந்து வரும் மண்ணில்
தீண்டும் கடலலைகள் தன்னில்
உந்தன் வரவுதனை எண்ணி - நாங்கள்
உறங்காமல் காத்திருந்தோம் அண்ணா

அழுத விழிகள் சிவந்து போக அலையை பார்த்திருந்தோம்
அழகு மேனி சுமந்து வந்தால் அள்ளி அணைத்திருப்போம்
தங்க மேனி இந்தித் தீயில் வெந்து போனதோ - அண்ணா
தமிழர்களின் இதயங்களில் அம்பு பாய்ந்ததோ (தென்றல்)

இங்கு வந்து நீயிருந்தால் இதயம் துள்ளுமே
எதிரிக்கெல்லாம் அந்தச் செய்தி வேலி போடுமே
படை நடத்தும் அழகில் நீயும் மன்னன் தானடா - தினம்
படிப்பதற்கும் உந்தன் வாழ்வு இன்பம் தானடா (தென்றல்)

தோளில் தூக்கி சென்றிருந்தால் பாரம் போய்விடும்
சுட்ட இடம் பார்த்திருந்தால் நெஞ்சு ஆறிடும்
கனி கொடுக்கும் காலம் வரை காத்திருந்தோமே - அந்த
கனவுகளை கடலில் மூடி அழித்து விட்டாரே (தென்றல்)





...றப்பு விழாவில் ...ரில் ஒருபகுதியினர்.

## பூங்காவை நிர்மாணித்த கலைஞர்களுக்கு கௌரவம்

தளபதி கேணல் கிட்டு சிறுவர் பூங்காவினை திறம்பட வடிவமைத்து, நிர்மாணித்துத்தந்த கலைஞர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கேணல் கிட்டு சிறுவர் பூங்காத் திறப்புவிழா நிகழ்வில் நடைபெற்ற நினைவுரைகளைத் தொடர்ந்து, இக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது, பூங்காவினைச் சிறப்புற வடிவமைத்து, நிர்மாணித்த கரம் நிறுவன இயக்குனர் திரு. யசோ அவர்களுக்கான கௌரவப் பரிசினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் வழங்கிக் கௌரவித்தார்.

அத்துடன் பூங்காவினைச் சிறப்புற அமைத்துக் கொடுத்த கரம் நிறுவன பொறியியலாளரான திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தமிழீழ நிர்வாகச் சேவைப்பொறுப்பாளர் திரு. டோமினிக் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

தளபதி கிட்டுவின் திருவுருவச்சிலையை, உண்மைத் தோற்றமும் அவரது உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வகையில் திறம்பட உருவமைத்த ஓவியர், சிற்பக் கலைஞர் ரமணி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளரால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, இதனை அமைக்க உறுதுணையாக நின்ற ஏனைய நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களும் பரசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான பரிசில்களையும் திரு. டொமினிக் வழங்கினார். ■



அழகிய பூஞ்செடிகளுடன்கூடிய பூங்காவின் மற்றொரு தோற்றம்.

# தமிழீழ உட்கட்டுமானம்

## தமிழீழ கைத்தொழில் மையங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

**எமது தேசிய விடுதலைப் போராட்டம் அளப்பெரும் தியாகங்களின் மத்தியில் முன்னெடுத்துச் செல்லப்படும் அதேவேளை, ஒரு தனியரசிற்கான பண்புகளுடன், மலர்ந்துவரும் தமிழீழத்தின் சமூக, பொருண்மிய, அரசியல் தேவைகளுக்கேற்ப, அதன் எதிர்கால உட்கட்டுமான அமைப்பை வடிவமைத்தல் தொடர்பாக ஆராயப் பட்டுள்ளது. இதற்கென யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், 8 குழுக்கள் தெரிவுசெய்யப் பட்டு, அவற்றினால் வழங்கப்படும் ஆலோசனைகள் தீர்மானங்களுக்கேற்ப, செயற்திறன் உடைய பெருந்திட்டம் ஒன்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெருந் திட்டத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக, வடிவமைக்கப்பட்ட தமிழீழ உட்கட்டுமான அமைப்பின், முக்கியமான அம்சங்களே இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

மூலவளம் - தொழில்வளம் - பொருள் வளம் இம்மூன்று விடயங்களும் ஒன்றை ஒன்று உள்ளகமாக ஒன்றிணைந்தவை. இவற்றைக் கருத்தில்கொண்டுதான் ஒரு நாட்டின் நிலையான சுபீட்சம் தங்கியுள்ளது. எனவே, இவற்றை மனத்திருத்தி நாம் தமிழீழ கைத்தொழில் திட்டங்களை திட்டமிடுதல் நலமாகும். இவ்விடயங்களை மேற்கொள்ளுவதன்முன், சர்வதேச அரங்கில் 18 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் ஏற்பட்டு வந்த கைத்தொழில் புரட்சியின் தாக்கங்கள் எவ்வாறு பெரிய பிரித்தானியாவையும், அதைச் சூழ்ந்த ஐரோப்பிய தொழில் உற்பத்தி நாடுகளையும் மாற்றத்திற்குள் உள்ளாக்கியதை நாம் சற்று சிந்திக்க வேண்டும். நெப்போலிய யுத்தம் முடிவுற்றவேளை, ஐரோப்பிய நாடுகள் எதிர்கொண்ட சமூக, பொருளாதார விடயங்கள் அனைத்தும் அந்நாடுகளில் ஏற்பட்ட தொழில் உற்பத்தி மாற்றங்களினால் எதிர்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் சிக்கல்கள் இருந்தாலும், ஈற்றில் இது அனுகூலத்தையே நல்கியது. இன்றும் பெரிய பிரித்தானியாவும், மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் அன்றைய அமைப்பில் உருவான தொழில் அபிவிருத்தித் திட்டங்களை காலத்துக்குக் காலம் கருத்தில்கொண்டு, வேண்டிய மாற்றங்களை இலாபகமாகச் செயற்படுத்தி வருவதால், தொழில் வளங்கள் சிதைவுறாது, நிலைபெற்று வருகின்றன. இவ்வாறு ஐரோப்பிய நாடுகளின் தொழில் வளர்ச்சி வரலாற்றில் துல்லியமாக போதிய தகவல் உண்டு. எமது நாட்டைப் பொறுத்தமட்டில், நாம் ஆரம்பிக்கவிருக்கும் தொழில் முயற்சிகள் அநேகம் எமக்கு புதியனவே! எமது ஒருமித்த ஒத்துழைப்பும், அயராத சேவையும் முதல் கட்டத்தில் இன்றியமையாததாகும். ஆரம்பவேளையில் நாம் மேற்கொள்ளும் திட்டங்கள் அனைத்தும், ஒரு சிலவற்றை தவிர்த்து பெரும்பான்மையானவை சிக்கல்மிக்கதாய் அமையலாம். சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தொழில் நுட்பவியலாளரின் காலத்திற்கேற்ற ஆலோசனைகள் முக்கியமாகின்றது. இவற்றை மறைபொருளாக மேற்கொள்ளாது, செயற்பாட்டுச் சிந்தனையுடன் கூடிய அறிவுக் கருவூலங்களாக கூட்டு முயற்சியுடனான ஒத்துழைப்பைப் பிரயோகம் செய்தல் ஈடேற்றங்கட்கு இன்றியமைவாகும் என்பதில் ஐயமில்லை.

அமைக்கப்படும் தொழில் மையங்கள் கட்டம் கட்டமாய் மேற்கொள்ளப்படும் திட்டவரையறைகள் அனைத்தும் முன்கூட்டியே தயார் செய்யப்படும். இதன் பிரகாரம் அமைவுறும் திட்டங்களில் பெரும்பான்மையானது முதற்கட்டத்தில் சுயதேவை பூர்த்தியை நிவர்த்தி செய்யுமாயின், அதன்மேல் விரிவாக்க நிலைகளை கருத்தில் கொண்டு சந்தைப்படுத்தும் வாய்ப்பை கண்டறிந்து ஏற்றுமதிக்கான விடயங்களைக் கவனித்தாக வேண்டும். இவ்விடயத்தில் உற்பத்திப் பொருட்கள் சர்வதேச சந்தையில் தரமிக்கதாய் அமைவுற வேண்டும். இவை அனைத்தும் அந்தந்த தொழில் உற்பத்தி முயற்சியைப் பொறுத்ததாகும்.

மேற்கொள்ளப்படும் தொழில் உற்பத்திகள், அந்தந்த வலயங்களின் இயற்கையினது சாதக பாதகங்கள், மூலவள ஏற்புடமை, மனித சக்தி வாய்ப்பு, செயற்கை வலுக்களைப் பெறும் நிலைப்பாடு, தொழில் மையங்களினால் முன்னும் பின்னும் மனித சமுதாய சஞ்சார நிலைக்கு நிகழக் கூடிய சாதக பாதக காரணிகளை கண்டறிதல் அதிமுக்கியமாகின்றது.

மேற்கூறிய மூலதார நிலைப்பாடுகளைக் கருத்தில்கொண்டு, அந்தந்த தொழில் அமைவுறு வசதிகளை எண்ணத்தில் வைத்து கைத்தொழில் நிலையங்கள் தமிழீழத்தில் அமைவு பெற வேண்டும். அவைகள் பின்வருமாறு:

1. உகந்த நிலப்பரப்பு, வெட்பதட்ப நிலையுடனான ஏனைய சூழ்நிலை சாத்தியங்கள்
2. மின்வலு
3. நீர்வசதி
4. மனித வளம்
5. போக்குவரத்து வசதி
   (அ) வீதிப் போக்குவரத்து
   (ஆ) துறைமுக வசதி
   (இ) விமான போக்குவரத்து வசதி

### உள்ளூர் விநியோகமும் ஏற்றுமதியும்

உற்பத்தி வாய்ப்பு மேம்பாடு நிறைவுறும் நிலையில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் பின்வருமாறு:


உடனடி சந்தை வாய்ப்பு இன்றியமையாததாகின்றது. உள்ளூர் நுகர்வு ஒரு புறமிருக்க, மேலதிக உற்பத்தி தரமிக்கதாய் அமைதல் அவசியமாகும். அவ்வாறு அமையும்போது, இவற்றை மத்திய களஞ்சியம் ஒன்றில் களஞ்சியப்படுத்தி, அங்கிருந்து விநியோக ஏற்பாடுகளை மேற்கொள்ளல்வேண்டும். விநியோக ஏற்பாடு என்று கூறுமிடத்து, உள்ளூர் நுகர்வு உட்பட ஏற்றுமதி ஏற்பாடுகளும் இங்கிருந்தே இடம்பெறவேண்டும். இவற்றை கருத்தில் கொள்ளும்போது மத்திய களஞ்சியம், அதி உன்னத வசதி அடிப்படை தேவையைப் பூர்த்தி செய்யும் இடத்திலேயே அமையவேண்டும். குறிப்பாகக்கூறில் துறைமுக, விமானப் போக்குவரத்து மையங்களே சாலச் சிறந்ததாகும். இவ்வாறு ஒவ்வொரு உற்பத்திப் பொருட்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு வகுக்கவேண்டும்.

### உள்ளூர் உற்பத்தி ஆக்கங்கள்

**இவ்விடயத்தை நான்கு பகுப்புகளாய் வகுக்கலாம்:**

1. உள்ளூர் கனியங்களையும், மூலப் பொருட்களையும்கொண்டு உள்ளூர் தேவைகளைப் பூர்த்திசெய்யும் உற்பத்தி ஆக்கங்கள் உதாரணமாக: தும்புத் தொழிற்சாலை, பால், மற்றும் பால் சார்ந்த உணவுப்பொருட்கள். உதாரணமாக வெண்ணைக்கட்டி (BUTTER), பாலாடைக்கட்டி (CHEESE), வெல்லம், மற்றும் பால்மா (MILK POWDER)

#### தமிழீழம் கைத்தொழில் மையங்கள்




2. வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்படும் மூலகங்களைக்கொண்டு உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்திசெய்ய உற்பத்தியாகும் பொருட்கள். உதாரணமாக: பிளாஸ்ரிக், P. V. C அ(..)த்தீன், பொலித்தின், தீப்பெட்டி, இரசாயனப் பொருட்கள், இறப்பர், அலுமினிய பாத்திரங்கள் மற்றும் ஏனைய உலோகப்பாத்திரங்கள்.

3. உள்ளூர் மூலப்பொருட்களைகொண்டு ஏற்றுமதிக்கான உற்பத்தி பொருட்கள் பக்குவப்படுத்தப்பட்ட உணவுவகைகள். உதாரணமாக: மதுசாரமும், மதுபானவகைகளும், புகையிலை, மற்றும் புகையிலையினால் ஆகும் ஏனைய பொருட்கள் (சிகரட்)

4. கனியங்கள் ஏற்றுமதி - இலுமனைற், உப்பு, சீமெந்து

### கைத்தொழில் மையங்கள் அமைவுறும் இடங்கள் :-

இயற்கைவளமான காடுகள் அழிவுறாமலும், விவசாய நிலங்கள் பாதிக்கப்படாமலும் வளம் குறைந்த தரிசு நிலங்கள் வசதிக்கேற்ப பயன்படுத்தப்படுதல் விரும்பத்தக்கது. காலப்போக்கில் விரிவாக்க நிலைக்கு உட்படுத்தக்கூடிய வாய்ப்புக்களையும் கருத்தில்கொள்ள வேண்டும். இரசாயனப் பொருட்கள் குறிப்பாக கிருமிநாசினி தொழில் மையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட சனச் செறிவிடத்தே மட்டும் மையங்கொள்ளவேண்டும். தொழில் மையங்களினால் காற்று மாசுபடக்கூடிய கைத்தொழில் நிலையங்கள் கடலைச் சார்ந்த இடங்களில் மையம்கொள்வது சாலச்சிறந்தது. தொழில் மையங்களில் வேண்டாத கழிவுகள் வெளியேற்றக்கூடிய வசதிகளைக் கருத்திற்கொண்டு, மையங்கள் அமைவுறவேண்டும். விரைவில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் குறிப்பாக தீப்பெட்டி, வெடிமருந்து வகைகள், எண்ணை சுத்திகரிப்பு நிலையங்கள் தக்கபாதுகாப்பு அமைவுறு இடங்களில் மையம்கொள்ள வேண்டும்.

### தமிழீழ கைத்தொழில் பிரதான பிரிவுகள்:-

1. மின் இயந்திரவியல்.
2. விவசாய கைத்தொழில்.
3. மீன்பிடி கைத்தொழில்.
4. கப்பல் கட்டும் கைத்தொழில்.
5. இரசாயன கைத்தொழில்.
6. உயிரியல் தொழில்நுட்பம்.
7. கைத்தொழில்.
8. திருமலை கைத்தொழில் பூங்கா.

### மின் இயந்திரவியல்

1. ஒலி, ஒளிகேட்கும், பார்க்கும் சாதனங்கள்.
2. வீட்டுப் பாவனைக்கான உபகரணங்கள்.
3. அலுவலக உபகரணம்.
4. மருத்துவ நிலையங்களுக்கான உபகரணங்கள்.
5. ஊர்திகளுக்கான மின் உபகரணம்.
6. ஒளியூட்டு மின் குமிழ்கள்.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

# பங்களிப்பு

சிறு கதை

மலரன்னை

அந்த அகாலவேளையிலும், யாழ். போதனா வைத்தியசாலை சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் சேவையின் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கும் அந்த வைத்திய சாலையில், பொறுப்புணர்ச்சிமிக்க டாக்டர்களும், கடமையே கண்ணாகக் கருதும் மருத்துவ தாதியரும், ஊழியர்களும், இன்னும் இயல்பான இனப்பற்றுதலால் உந்தப்பட்டு, நேசக்கரம்கொண்டு நோயாளர்களை அணைத்து, ஆறுதலளிக்கும் நலன் விரும்பிகளும் என அனைவரது செயற்பாடுகளும் துரிதகதியில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

நுழைவாயிலில் அடிக்கடி வாகனங்கள் வந்து நிற்பதும் காயமடைந்தவர்கள் உடனுக்குடன் அவசர சிகிச்சைப்பிரிவிற்குஅனுப்பி வைக்கப்படுவதுமாய் அந்தப் பிரவேசப் பகுதி அமளிதுமளிப்பட்டது. அங்கு கடமையாற்றுபவர்களின் முகங்கள் இறுகிக் கிடப்பதை அவதானிக்க முடிந்தது. பொறுப்புணர்ச்சி, புரிந்துணர்வு என்ற அடிப்படையைக் கொண்டு அங்கு எல்லோரது செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

ஆபரேசன் தியேட்டர் அமைதியாக, ஆனால் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கே அறுவைச் சிகிச்சை நிபுணராக, அண்மையில் லண்டனிலிருந்து திரும்பியிருந்த டாக்டர் ராகவனது தலைமையின் கீழ் சிகிச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. காயமடைந்தவர்களின் உறுப்புக்களில் ஊடுருவியிருந்த சன்னங்கள், செல் துண்டுகள் முதலியவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி, இளை போட்டு வார்ட்டுகளுக்கு அனுப்பிவைத்துக் கொண்டிருந்தனர்.

பிரத்தியேகமான சில கேஸ்களை ராகவனே கையாண்டான். தலையில் பலத்த காயத்துடன் ஒருவரை அவசர அவசரமாக ஸ்ரெச்சரில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தனர். அந்த நோயாளியினது மண்டையின் பிற்பகுதி சேதமடைந்திருந்தது. ராகவன் முழு நம்பிக்கையுடன் அந்த நோயாளியைக் காப்பாற்ற முயற்சித்தான். அவனது கைகள் ஏறக் குறைய இரண்டு மணித்தியாலங்கள் இயங்கிய பின்னர், உதவி டாக்டர்கள் அந்தக் காயமடைந்தவரின் மண்டையைச் சுற்றிக் கட்டுப் போட்டனர். *I. C. U* எனும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அந்த நோயாளி அனுப்பிவைக்கப்பட்டான்.

நோயாளிகளின் வருகை குறைந்து விட்டதனால் டாக்டர் ராகவன், ஆபரேசன் தியேட்டரைவிட்டு வெளியேறி, அவசரமாக அவசரசிகிச்சைப் பிரிவை நோக்கி நடந்தான். வார்டினுள் நுழைந்தவன் ஒருகணம் தனது பார்வையை வார்ட் முழுவதிலும் சுழலவிட்டான்.

அங்கே.... டாக்டர் சுகந்தி, மண்டையில் கட்டுப் போட்டிருந்த அந்த நோயாளியின் இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தாள். இரவு முழுவதும் நித்திரை விழித்து இருந்ததினால் அவளது விழிகள் சிவந்திருந்தன. ராகவன் அவள் அருகே சென்றதும் அவள் இருக்கையைவிட்டு எழுந்து கொண்டாள். ஒவ்வொரு நோயாளியினது விபரங்களை விபரித்துக் கொண்டே அவனுக்கு வார்ட் முழுவதையும் சுற்றிக் காண்பித்தாள். எல்லா கேஸ்களையும் பார்த்து முடித்ததும், ராகவன் அவளிடம் "சுகந்தி! நான் குவார்டஸ்சுக்குப் போய் கொஞ்சநேரம் றெஸ்ட் எடுக்கலாம் என்று யோசிக்கிறன்".

"அதுக்கென்ன போய் றெஸ்ட் எடுங்கோ, நான் டியூட்டி முடிய வாறன்".

சொன்னவள் ராகவன் போவதையே கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது மனதில் தோன்றிய பெருமிதம் பார்வையினூடாக வெளிப்பட்டது. அவளுக்கு அந்த நேரத்திலும் தான் வாசித்த, "மார்க்ஸீம் கோர்க்கி" யின் சில வரிகள் ஞாபகத்துக்கு வந்தன.

"நமது உரிமைகளுக்காகப் போராடும் போது, மக்கள் ஒன்று திரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று, நாமெல்லாம் உரிமையை இழந்தவர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது உரிமைகளைப் போராடிப் பெறமுடியாது".

எவ்வளவு உண்மை பொருந்திய வார்த்தைகள் என எண்ணியவள், வார்டினுள் தனது பார்வையைத் திருப்பி நோட்டம் விட்டாள். எல்லா நோயாளிகளும் சலனமின்றி இருப்பதாக அவளது பார்வைக்குத் தோன்றியது. அவளது கால்கள் தனது பிரத்தியோக அறையை நோக்கி நடந்தன.

சற்று ஓய்வாகக் கதிரையில் அமர்ந்துகொண்டவளின் நினைவலைகள் பின் நோக்கிப் பாயத் தொடங்கின.

சுகந்தி அப்போது ஏ. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவளது அத்தான் டாக்டர் ராகவன் 'ஸ்காலர்சிப்' மூலம் மேற்படிப்பை மேற்கொள்ள லண்டனுக்குப் புறப்பட வேண்டிய வேளையது. சுகந்தி மாமா வீட்டிற்குப் போயிருந்தாள். மாமா, ராகவனைப் பார்த்துக் கண் சிமிட்டியவாறே அவளைக் கேலி செய்தார்.

"சுகந்தி ஒரே முறையில் மெடிசினுக்கு என்ர பண்ணிப் போடு, சோதினையில் கோட்டை விட்டியோ பிறகு கொத்தானையும் கோட்டை விட்டிடுவாய்".

இப்போதும் அந்த வார்த்தைகள் அவளது காதில் ஒலிப்பது போலிருக்கின்றது. மாமாவின் வேண்டுகோளை சுகந்தி நிறைவேற்றி விட்டாள். அல்லும் பகலும் முழு மூச்சுடன் முயன்று தன் பெயருக்குப் பின்னால் எம். பி. பி. எஸ் என்ற பட்டத்தைச் சேர்த்துக்கொண்டாள். சுகந்தி யாழ். போதனா வைத்திய சாலையில் டாக்டராகக் கடமையாற்றியபோது, ராகவன், தன் பெயருடன் பல பட்டங்களைச் சுமந்துகொண்டு தாயகம் திரும்பினான்.

ராகவனுக்கு வரும் வழியில் பிரயாணத்தினால் ஏற்பட்ட கஸ்டங்கள் வெறுப்பைத் தந்தது. லண்டனிலிருந்து புறப்பட்டு பன்னிரண்டு மணித்தியாலத்திற்குள் கொழும்பு வந்தவனுக்கு, யாழ்ப்பாணம் வந்து சேரச் சில நாட்கள் சென்றன. அதுவும் கரிய இருட்பொழுதினில் கிளாலிக் கடலைக் கடந்த அனுபவம் அவனுக்கு வாழ்கையையே வெறுக்க வைத்தது. ஒரு கணம், தான் இங்கிருந்து புறப்பட்டபோது 'லக்ஸரி' பஸ்சில் சொகுசாக அமர்ந்து ஏதோ சினிமாப் படமொன்றைப் பார்த்தவாறு குசியாகப் பயணித்த சம்பவத்தை நினைத்துக் கொண்டான். எவ்வளவு மாற்றங்கள் இந்த மண்ணில் ஏற்பட்டிருக்கின்றன. மண்ணெண்ணைப் புகையைக் கக்கிக்கொண்டு திரியும் வாகனங்களைப் பார்க்க அவனுக்கு வயிற்றைக் குமட்டியது. அத்துடன் மின்சாரம் இல்லாமல் குப்பி விளக்குகளுடன் இருளில் வாழும் மக்களைப் பார்க்க அவனுக்கு மேலும் வெறுப்பை ஊட்டியது. கடந்த பல ஆண்டுகளில் எந்த ஒரு வேலையையும் மின்சாரம் மூலமே செய்து பழக்கப்பட்டு வந்தவனுக்கு, இவை சலிப்பைக் கொடுத்தது வியப்பில்லைத்தான்.

ராகவன், சுகந்தியைத் திருமணம் செய்துகொண்டு லண்டனுக்குத் திரும்பி விடுவதற்குத் தீர்மானித்தான். இருவரது பெற்றோர்களும் திருமண ஆயத்தங்களைச் செய்வதில் ஆரவாரத்துடன் ஈடுபட்டனர்.

சுகந்தியைச் சந்தித்த ராகவன் தனது தீர்மானத்தை வெளியிட்டான். அதிர்ந்து போனாள் சுகந்தி. அவள் இதைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இந்த மண்ணை விட்டு அந்நியப்பட்டுப் போவதென்பது அவளால் முடியாத காரியமென்பதை, அவள் ராகவனுக்கு சற்றுத் தயக்கத்துடன் வெளியிட்டாள். அவளை அன்றாடம் சந்திக்கும் நோயாளரின் முகங்கள், அவளெதிரே தோன்றி நியாயம் கேட்பதை உணர்ந்தாள். "எங்கள் இனத்தவரை இங்கே நிர்க்கதியாக்கிவிட்டுவிட்டு அந்நியருக்குச் சேவை செய்யப் போகிறாயா?"

முடியவில்லை. அவளால் அதை சிந்திக்க முடியவில்லை. ஒரே பிடியாகத் தான் ஊரைவிட்டு வர முடியாதென மறுத்துவிட்டாள். ராகவன் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். "சுகந்தி வசதிகளையும், வாய்ப்புகளையும் உதறிவிட்டு இங்கை இருந்து நீர் என்ன சுகத்தைக் காணப் போகிறீர்?"

"அத்தான்! இங்கை ஆகக் குறைந்த வசதியோட இருந்தாலும் கூட, எங்கட சனங்களுக்கு, எங்கட மண்ணுக்காக என்று சேவை செய்யிற போது என்ரை மனம் குளிர்ந்து போகுது. அதிலை கிடைக்கிற நிம்மதி போதும் எனக்கு. தயவு செய்து நீங்கள் என்னை மறந்திடுங்கோ".

ஒரே முடிவாகச் சொல்லிவிட்டாள் சுகந்தி. ராகவனால் அவ்வளவு எளிதில் சுகந்தியை மறந்துவிட முடியவில்லை. அவளை மட்டுமல்ல அவளது ஆணித்தரமான வார்த்தைகளையும்தான்.

ராகவன் இப்போது சிந்திக்கத் தொடங்கினான். சுகந்தியின் பிடிவாதத்தில் நியாயமிருப்பதை முதன் முதலாக அவனுடைய உணர்வுகள் சீரணிக்கத் தொடங்கின. நீண்ட சிந்தனையின் பின் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். தாயகத்திலேயே தங்கியிருந்து தனது பணியைத் தொடருவது என உறுதியெடுத்துக் கொண்டான்.

"டொக்டர்! எட்டாம் நம்பர் பெட்ல இருக்கிற பேசன்டுக்கு பிறஸ் மாதிரிக்கிடக்கு ஒருக்கா வந்து பாருங்கோ"

நர்சின் குரல் அவளின் சிந்தனைத் தொடரை அறுத்து, கடமைக்கு அழைப்பு விடுத்தது. சுகந்தி அவசரமாக எழுந்து போனாள். அந்த நோயாளியின் குணம் குறிகளைச் சிறிது நேரம் அவதானித்தவள், நாடியோட்டத்தைப் பரிசோதித்தபின்,



நர்சிடம் ஏதோ ஊசி மருந்தைக் கொண்டுவரும்படி ஏவினாள். நர்ஸ் கொண்டுவந்த மருந்தை நாளத்தின் மூலம் அந்த நோயாளியின் உடலில் செலுத்தினாள். சிறிது நேரத்தில் வலிப்புத் தணிந்து, நோயாளி உறக்கத்தில் ஆழ்ந்து போனான். மீண்டும் ஒரு முறை நாடித்துடிப்பைப் பரிசோதித்துவிட்டு, சுகந்தி தன் இருக்கைக்குத் திரும்பினாள்.

இப்படியாக அந்த வைத்திய சாலையில் உயிர் காக்கும் பணி ஓய்வு ஒழிச்சலின்றி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அன்றைய கடமை முடித்துப் புறப்பட்ட சுகந்தியை, இரத்த வங்கியில் கடமையாற்றும் அவள் சக தோழி டாக்டர் உமா சந்தித்தாள்.

"சுகந்தி! உம்முடைய அத்தான், டொக்டர் ராகவன் இன்றைக்கு பிளட் டொனேற் பண்ணினவர்"

உண்மையாகவே சொல்லுகிறீர் உமா!

**தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...**

## சுதந்திரத்தைத்தேடி...

வோம். இப்படிக்கேலி செய்தால் ஓடித்துரத்தி அடித்துவிடுவாள்.

1992. 03. 01 இல்விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தன் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது. அன்று கடற்புலிகள் மகளிர்படையணி தோற்றம் பெற்றநாள். எங்கள் தலைவரின் கனவுகளுக்கு அபார நம்பிக்கையூட்டும்படியாக கடற்புலிகளின் வளர்ச்சியில் பாமா வகித்த பங்கு அளப்பரியது.

1992 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பாமா தன்னைக் கடற்புலிகளின் அணியில் இணைத்துக் கொண்டாள். அன்றிலிருந்து கடற்புலிகள் மகளிர்படையணியை வளர்ப்பதில் அவள் தீவிர அக்கறை செலுத்தினாள். சக போராளிகளுக்கு அணிநடை பழக்குவதிலிருந்து முக்கியமான வகுப்புக்களை எடுப்பது வரை, முக்கியமாக பங்கேற்றாள். தலைமையேற்று நடத்தினாள்.

கிளாலியில் மக்கள் பாதுகாப்புக்காக எம்மால் நடத்தப்படும் பாதுகாப்புப் பணியில், இவளுடன் ஒரு குழு பங்களித்துக்கொண்டிருந்தது. கிளாலிக்கடலில் கொட்டும் பனியிலும், மழையிலும், ஊசியாகக் குத்தும் உப்புக் காற்றின் மத்தியிலும் அவள் விடிய விடியக் காத்திருந்த காலங்களை நினைக்கின்றோம். தூரத்தே புள்ளியாய் விசைப்படகுகள் தெரியும். கடற்பரப்பில் மக்களின் படகுகள் ஆடிச்செல்லும். நெஞ்சு நீர் அற்று வரண்டு போய் கண்கள் பீதியால் வழிய, அவலப்படும் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய கடற்சண்டைகளில் பாமா பங்கேற்றதை நினைக்கின்றோம்.

'நீ வீட்டில் மிகுந்த பிடிவாதக்காரியாக இருந்தாயாமே? நினைத்ததைச் செய்து முடித்து, நினைத்ததை, வாங்கித்தரும்படி அடம்பிடித்த அந்தப் பிடிவாதம் தான் கடலிலும் உன்னைச் சாதிக்க வைத்ததோ?'

"வோட்டஜெட்டை ஏன் நீங்கள் எடுக்கவில்லை?" என்று பாமாவின் மாமா கேட்ட பொழுது "மாமா அதைக் கொண்டு வந்து விட்டுத் தான் உங்களுடன் கதைப்பேன்" என்று கூறினாளாம். இதைக் கண்கலங்கியவாறு மாமா கூறினார். நினைத்ததைக் சாதித்து முடிக்கும் அந்தக் குணம் பாமாவுடன் கூடப் பிறந்தது என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் கண்டோம்.

இத்தகைய நினைத்ததைச் சாதிக்கும் பண்புதான் சாவின் இறுதிக் கணங்களிலும் அவளை இறுகப் பற்றியிருந்தது.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் திட்டமிடப்பட்டது. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி முக்கிய பங்கேற்றது. இச் சமரில் கடற்புலிகளின் பங்கு அளப்பரியது.

அந்தவகையில் நாகதேவன்துறையில் கடற்படைத் தளம் மீதான தாக்குதலுக்கு, ஒரு படகுக்குப் பொறுப்பாளராக பாமா அனுப்பப்பட்டாள். சண்டைக்கு தனது படகைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த பாமா, கரையில் நின்ற போராளிகளிடம் ஆளை ஆள் தெரியாத இருளில், நம்பிக்கை தொனிக்க, "இந்தச் சண்டையிலை நாங்கள் வோட்டஜெட் ஒண்டைக் கொண்டுவருவம்" என்று சொல்லிவிட்டுப் போனாள். சொன்னபடி நாகதேவன்துறைக் கடற்படைத்தளத்தைத் தகர்த்துவிட்டு ஒரு நீருந்து விசைப்படகோடு முகமெல்லாம் சிரிப்பாக வெற்றிப் பூரிப்போடு கரைக்கு வந்தாள்.

அதிகாலை திரும்பவும் அவளை வருமாறு வோக்கி கூப்பிட்டது. எல்லா ஆயுதங்களுடனும் அவளது படகு ஒரு குருவியைப் போலப் புறப்பட்டு புள்ளியாய் மறைந்துபோனது. ஏதோ ஒன்று அவளிடம் வித்தியாசமாகத் தென்பட்டது. வழமைக்கு மாறாக நிறைய எதையோ கூறநினைப்பதுபோல அவளது கையசைப்பு அந்த இருளில் மங்கலாகத் தெரிந்தது. காற்றைக் கிழித்தபடி ஓயாத ரவைகள். காதை உரசுவதான அவற்றின் சத்தங்கள். அவைகளின் மத்தியில் அவளது படகு தூரத்தே மறைவதைப் பார்த்துக்கொண்டிருந்தோம். கடலலைகள் ஆர்த்தெழுந்து படகை மறைத்தன. நிலவை விழுங்கிய வானத்தில் ஒளிப் பொட்டாய் நட்சத்திரங்கள். வானம் அமைதியாய்த்தான் இருந்தது. கனதியான குண்டுச் சத்தங்கள். கண்ணிமைக்கும் இடைவெளியில், அதற்கும் இடைவிடாத கணத்துளிகளில் ஓசைகள் கேட்டுக்கொண்டேயிருந்தன.

"பப்பா.... பப்பா...." வோக்கி கூப்பிட்டது. அவசரமாகத் தொடர்பெடுக்க முயன்று தோற்றுப்போய்.

ஒரு ரவை அவளது காலை ஆழமாகப் பிய்த்துச் சென்றது. பீறிட்ட இரத்தக்குளியலில் பாமா வீழ்ந்தபோது....

மீண்டும் மீண்டும் மங்கலான குரலில் அவள் கட்டளை பிறப்பித்துக் கொண்டுதான் இருந்தாள். மெல்ல மெல்ல குரல் மங்கி, துடிப்படங்கி.....

"காலிலைதான் காயம்.... பிரச்சினையில்லை", என்ற எங்கள் எல்லோரினதும் நம்பிக்கைகளை பொய்யாக்கிக் கொண்டு மெல்ல மௌனித்துப் போனாள் அந்தப் பிடிவாதக்காரி. உப்புக் கரிக்கும் கடனீரேரியோடு கலந்து போனாள். கிளாலிக் கடல் உதிரத்தில் தோய்ந்தபடி, மீண்டும் மீண்டும் பொங்கியெழுந்தது.

நானூற்று ஐம்பத்தெட்டு மாவீரர்களோடு எங்கள் பாமா, விடுதலையின் பெருநெருப்பை சுவாசித்தபடி... வெற்றியின் வேராய் உறங்கட்டும் அமைதியாய்... ■

# 158 தமிழ் அகதிகளும் இனப் படுகொலை

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து, சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 158 தமிழ் அகதிகளும், இனப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

வாழைச்சேனை சிறீலங்கா தலைமைக் காரியாலய 8 பிரிகேட் அணியைச் சேர்ந்த இராணுவத்தினர், இரண்டு பஸ்கள் நிறைய வந்திறங்கினர். கூடவே இரண்டு வெறும் பஸ்களையும் கொண்டு வந்திருந்தனர். அகதிகள் முகாமிலிருந்த ஆண்கள் 3 வரிசைகளில் நிற்கவைக்கப்பட்டு, தலையாட்டிகளின் உதவியுடன் கைது செய்யப்பட்டனர். பதினொரு வயதுச் சிறுவன் முதல் வயோதிபர்கள் வரை 158 பேர் கைதாக்கப்பட்டு பஸ்லில் இழுத்துச் செல்லப்பட்டனர். இதனையடுத்து அகதிகள் மண்டபத்துள் குண்டு ஒன்று வெடிக்கவைக்கப்பட்டது. இதில் சிலர் இறந்தும் பலர் காயமடைந்தும் பெருந்துன்பம் ஏற்பட்டது. இந்தக் கைதுகளுக்குப் பொறுப்பானவர்களாக, செங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் களு ஆராய்ச்சி, மட்டுநகர் தேசிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மொகமட் முனஸ் என்ற முஸ்லீம் பெயரில் நடமாடிய டயஸ் ரிச்சேர்ட், வாழைச்சேனை இராணுவ முகாமைச் சேர்ந்த கமாண்டர் மஜீத், மட்டுநகர் முகாமைச் சேர்ந்த மொகான் சில்வா ஆகியோர் பின்னர் அடையாளம் காணப்பட்ட போதும் சிறீலங்கா அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல்கலைக்கழக அதிகாரிகளும், இக் கைது நடந்த நேரம் வந்தாறுமூலையில் நடமாடிய நாற்பத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்களில் பலரும் சாட்சியமளிக்க ஆயத்தமாக இருந்த போதிலும், எவ்வித நீதி விசாரணையும் நடத்தாத சிறீலங்கா அரசாங்கம், தாங்கள் கைது செய்தது. 32 பேரை மட்டுமே; இவர்கள் 24 மணி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர் என முழுப் பொய் கூறி வந்தது.

ஆயினும், தற்போது இந்த 158 பேரும் இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளனர் எனவும், இவர்களுக்கு மரண அத்தாட்சி பத்திரமும், நஸ்டஈடும் வழங்குமாறு மனித உரிமைகள் பணிக்குழுவின் தலைவர் ஜே. எல். ர. சோசா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ■

# மக்கள் எதிர்பார்ப்பை உணர்ந்து செயற்படுகின்றோம்

□ காவல் துறை பொறுப்பாளர் நடேசன்

"விடுதலை போராட்டத்தில் நம்பிக்கைகொண்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்திசெய்வதே தமிழீழக் காவல் துறை" என தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

இலண்டன் பி.பி.சி. சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அளித்த பேட்டியில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். மக்களின் எதிர்பார்ப்புகள் என்ன என்பதை நன்கு உணர்ந்து அதன்படி செயலாற்றுவதே எமது முக்கியநோக்கமென தெரிவித்தார்.

இதற்கு அமையவே காவல்துறை வடிவமைக்கப்பட்டதாகவும் சிங்கள பொலிஸ் செய்த சம்பவங்கள் பொதுமக்களுக்கு நன்கு தெரியும். எனவே, நாம் இதிலிருந்து முற்றாக வேறுபட்ட வடிவிலே எமது கடமையைச் செய்கின்றோம். அத்துடன், யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் பல காவல் துறை பணிமனைகள் அமைக்கப்பட்டதாகவும், எதிர்காலத்தில் வவுனியா, மன்னார் பகுதிகளில் ஒவ்வொரு காவல் துறை பணிமனைகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். ■

## காஷ்மீர் - இந்தியாவின்...

வெகுவாக மோசமடைந்தன. 1981 ஆம் ஆண்டளவில் J. K. L. F. அமைப்புத் தோற்றம்பெற்றது. அடக்குமுறைகள் அதிகரிக்க பாக்கித்தான் உதவிபெற்ற இசுலாமிய மத அடிப்படைவாதக் குழுக்கள் பலம்பெறலாகின. பதிலாக, மென்மேலும் இராணுவ அடக்குமுறையே முடுக்கி விடப்பட்டது. மக்களின் சனநாயக உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்காமல், இப்போது இந்தியா மேற்கொண்டுள்ள இராணுவ ஆட்சிமுறையே காஸ்மீர் மக்கள் மேல் இந்தியா தொடுத்துள்ள நான்காவது போராகக் கூறப்படுகிறது. எவ்வித அரசியல் நேர்மையற்ற தார்மீக ரீதியற்ற இந்த அடக்கு முறைக் கொள்கையின் மோசமான விளைவே, இன்று காஸ்மீரில் இந்து -முசுலிம் மோதலாக உருவெடுத்துவிட்டது. அதிலும் குறிப்பாக பாரதீய சனதாக் கட்சியோ குறையும் தனது செல்வாக்கைத் தக்கவைக்க காஸ்மீர் பகுதியில் தலையிட்டு, இந்துமத வெறியைப் புகுத்தி குட்டையைக் குழப்பி வருகிறது. அதேசமயம் வழமைபோலவே இந்தியாவின் பலதரப்பட்ட உளவு அமைப்புகளும் அங்கு தலையிட்டு மனம் போனபோக்கில் செயற்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் மத்திய உள் விவகார அமைச்சர் சவானிற்கும் அவரது துணை அமைச்சர் ராஜேஸ் பைலட்டிற்கும் நடக்கும் பனிப்போர் விளைவாகவும் காஸ்மீர் நிலை மேலும் குழப்பமடைகின்றது. மத்திய அமைச்சர்களின் பரிசோதனைக் களமாக அவைகள் தமது செல்வாக்கினைப் பெருக்க பயன்படுத்தும் அரசியல் மேடையாக, ஜம்மு - காஸ்மீர் மாறிவிட்டதாக அண்மையில் பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

எனவே, இவ்வாறாக இந்திய அரசின் தான்தோன்றித்தனமான போக்கால் காஸ்மீர் குருதி சிந்துகின்து. எனினும், தொடர்ந்து போராடுகிறது. அங்கு முன்னர் போல் சனநாயக வழிமுறைகளை புகுத்தப்போவதாகக் கூறி, இப்போது மீண்டும் இலண்டனிலிருந்து பருக் அப்துல்லா வரவழைக்கப்படுகின்றார். ஆனால், இந்த அரசியலெல்லாம் காஸ்மீர் மக்களிடையே இனிமேல் எடுபடாது என்றே கருதப்படுகின்றது. காஸ்மீரில் ஒரு தேர்தல் தான் நடத்த முடியும், அது காஸ்மீரின் விடுதலைக்காக மட்டுமே இருக்கும் என்கின்ற போராளித் தலைவர் ஒருவரின் கூற்றே இதனை உறுதிப்படுத்துகிறது. ■

## பெரும் பலம்பொருந்திய...

மாணவிகளின் பணிவு, பயிற்சி பெறும் விருப்பு, ஆற்றல் போன்றவற்றையிட்டு, பெரிதும் திருப்தி தெரிவித்தார். "யாழ்ப்பாணத்தில் இவ்விளையாட்டு குறைவாகவே விளையாடப்படுகின்றது. அதே வேளை, புதிய புதிய நுட்பங்களைக் கற்பிக்க வசதிகளும் குறைவாக இருக்கின்றன. வீராங்கனைகளும்கூட, பல்வேறுதுறை விளையாட்டுக்களில் அங்கம் வகிப்பவர்கள். எனவே அவர்களின் கல்விக்கும் குந்தகம் ஏற்படாது செயற்படவேண்டியிருக்கின்றது. 1993 இல் மாவட்ட சம்பியன்களாக எமது கல்லூரியே வந்தது என்கிறார்.

இம்முறை என்னவிதமாக மாவட்டப் போட்டிகளை எதிர்கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்ட போது, "வலயம் ஒன்றில் இருந்தும், இரண்டில் இருந்தும் வரும் அணிகள் எனும்போது, அங்கு தெரிவுசெய்யப்பட்ட திறமையான அணிகள்தான் வரப்போகின்றன. அதனை நன்கு மனதில்வைத்து, அதற்கேற்ப கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். பயிற்சி ஆட்டங்களை ஆடவேண்டும். நாம் எம்மால் இயன்றளவு சிறப்பாக மாவட்ட மட்டத்தில் செயற்படத் தீர்மானித்துள்ளோம். எனினும், இப்போதே முடிவுகளைத் தீர்மானித்துவிட இயலாதல்லவா? என்கிறார். பொதுவாக இவருடன் உரையாடியபோது, 15 வயதுப் பிரிவை ஆரம்பித்து, அங்கிருந்தே பயிற்சியை ஆரம்பித்தால் மிகத்தரம் வாய்ந்த அணிகள் உருவாக இயலும். யாழ்ப்பாணத்தில் வலைப்பந்தாட்ட ஆற்றலுக்கு குறைவில்லை. ஆனால், அது மெருகூட்டப்படவேண்டும் என்று கூறினார். ■

## தமிழீழத் தேசிய...

கும் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தயாராக இருப்பதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது எனக்கூறிய அனுருத்த ரத்வத்த, தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, சிறீலங்காவின் புதிய அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளை, குறிப்பாக பகுதிப் பொருளாதாரத்தடை நீக்கத்தை அக்கடிதம் வரவேற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

### லயனல் பெர்னாண்டோ நியமனம்

இதையடுத்து, சிறீலங்கா அரசாங்கத்தின் மூத்த அரசாங்க ஊழியரும், முன்பு வடக்கு -கிழக்கின் சிறீலங்கா அரச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தவருமான லயனல் பெர்னாண்டோவை, சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான தனது உத்தியோகபூர்வ பிரதிநிதியாக அறிவித்துள்ளது. இவர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்குரிய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விரைவில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்வார் எனத் தெரிய வருகின்றது. ■

## தமிழ் மக்கள்...

நோக்கிய அரசின் (Defacto Government) சட்ட பூர்வத்தன்மையை மேலும் உறுதி செய்துள்ளது. அத்துடன், சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனவும், விடுதலைப் புலிகளின் மண்மீட்புக்கான நடவடிக்கைகளை பயங்கரவாதச் செயல்கள் எனவும் உலகுக்குக் காட்டி வந்த போலித்தனம், இதனால் சர்வதேச சமூகத்துக்கு அம்பலமாகியுள்ளது. திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கவின் பேச்சின் மூலம் விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசு, அரசு நோக்கிய அரசுக் கூட்டாளி (Defacto Alience) ஆகக் கருதுவது மீண்டும் உறுதியாகி உள்ளதாக சர்வதேச அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். 1989 இல் சிறீலங்காவின் ஜனாதிபதி காலம்சென்ற பிரேமதாசா, விடுதலைப் புலிகளை அரசு நோக்கிய அரசுக் கூட்டாளியாகக் கருதியே தனது பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார். ஆயினும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர விரும்பாது, அதன் மூலம் சுயநலன்களைப் பேணிவந்த சிறீலங்கா இராணுவ -மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளே அப்போக்கைத் தடைசெய்து, யுத்தத்தைத் தொடர வைத்தனர் என, மைக் மூர் போன்ற தென்னாசிய ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

## ஏக்கம்

புலிப் பெண்ணே,
எம் தாயகத்தின்
ஒரு பிடி மண்ணும்
உனக்காக ஏங்குகிறது.
ஏனெனில்
உன் பாதங்கள்
படும்போதுமட்டுமே
குளிர்கின்றது அவள்மேனி
பண்பாடு இல்லாத
பாதகர்களின் சுவடுபட்டு
அனலாகும் போது-அவள்
"என் மகளின்
பாதம்பட்டு-நான்
குளிரேனோ?"என்று
ஏக்கங்கொள்கிறாள்.

* * சிலோமினா




விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த அனேகமான சண்டைகளில் -அது தரைச்சண்டையாயினும் சரி கடற்சண்டையாயினும் சரி அவற்றிலே -தனது பங்களிப்பைச் செய்து, தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்டவள் எங்கள் பாமா!.

எல்லாவற்றிலுமே குறிப்பிடத்தக்க திறமையுள்ள, நிறைவான போராளியாக நாம் அவளைக்கண்டோம். நெஞ்சுக்குள் உறைந்துபோன அவளது உருவமும் உறுதியான நடவடிக்கைகளும் எந்த ஒரு போராளியையும் அடிக்கடி நினைவுகூரச்செய்யும்.

"எங்கட பாமாக்காவோ?"

என்று அவளைப்பற்றிக் கூறி கண்கலங்கும் போராளிகள் அனேகம். நேற்றுவரை இந்தத் தென்னந்தோட்டங்களிலும், கடலின் உப்பு நீரிலும் கால்களை நீளநீள வைத்தபடி உலா வந்தவள். இன்று எங்கள் நினைவுகளுக்குள் நீளமாய் உறைந்து போனாள்.

பருத்தித்துறையிலுள்ள இன்பருட்டி கடற்கரை ஓரத்தில் சின்னக்குழந்தையாய் விளையாடி சிற்பிகளும் கிழிஞ்சல்களும் பொறுக்கி... அவள் குழப்படிக்காரியாகத்தான் இருந்தாள். சண்முகசுந்தரம் ஐயாவுக்கும் இரத்தினேஸ்வரி அம்மாவுக்கும் நாலாவது பிள்ளையான அவள், சியாமளவாக வலம்வந்து அந்த வீட்டை நிறையவைத்தவள். 1971. 03. 28 இல் அவள் பிறந்தபோது, அந்த வீடு நிறைந்துதான் போனது. சியாமளா சரியான துடியாட்டக்காரி. அம்மாவுக்கு விளையாட்டு காட்டிவிட்டு, இன்பருட்டிக் கடற்கரை ஓரங்களில் கால்கள் மண்ணிற் புதைய, சின்னக் குழந்தையாய் தத்தித் தத்தி வருவாள். தொடுவானைப் பார்த்தபடி, எரிகின்ற அலைகளில் நனைந்தபடி நீண்ட நேரம் நிற்பாள். அம்மா அவளைக்காணாது தேடிவரும் வேளைகளில் ஓடி ஒளித்து - அவளது குழந்தைக்காலக் குழப்படிகள் சொல்லிமாளாது.

அவள் தனது பள்ளிக்கூட வாழ்க்கையிலும் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். தனது உயர்தரக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியில் கற்றபோது, உயிரியல் விஞ்ஞானத்தைத் தேர்ந்தெடுத்தாள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி என்றுமே பின்தங்கியது இல்லை. விளையாட்டுப் போட்டிகளில் அவள் பெற்ற சான்றிதழ்கள் ஏராளம்.

இப்படி இருந்தவளது வாழ்வின் அமைதியை இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் குலைத்தன. அவளது அண்ணன் கடற்புலி லெப்டினன்ட் வெங்கடேஸ் வீரச்சாவைத் தழுவிக்கொண்டபோது, படிப்பைவிட நாட்டுப் பணி மேலாகப்பட்டது. அண்ணன்கொண்ட இலட்சியப்பணியைத் தொடர, சியாமளா இயக்கத்தில் இணைந்தாள்.

1989 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அவள் இயக்கத்திற்கு வந்தநேரம். தமிழீழத்தில் வழுக்கி விழுகிற இடமெல்லாம் இந்திய இராணுவம். புலிகளை இரவும் பகலும் சல்லடைபோட்டுத் தேடிக்கொண்டிருந்த நேரம். புலிகளின் முக்கியமான நடவடிக்கைகள் யாவும் காட்டிலே மேற்கொள்ளப்பட்டன. அப்போது இருந்த சூழ்நிலையில் இயக்கத்தில் போராளிகளின் எண்ணிக்கை மிகக்குறைவு அதுவும். பெண்போராளிகள் எண்ணிக்கை ஒருசில நூறுகளுக்குள் மட்டுமே. இத்தகைய சூழ்நிலையில் சியாமளா பாமாவாக தன்பெயரை வைத்துக்கொண்டு, நான்காவது பயிற்சிமுகாமில் பயிற்சி எடுத்தாள். பயிற்சிகளில் அவள் காட்டிய திறமையும் உயர்ந்த திடமான உடல் அமைப்பும் அவளை 50 கலிபர் துப்பாக்கியின் உதவிச் சூட்டாளராகச் செயற்படவைத்தது. தனது கனரக ஆயுதத்தைத்தோளிலே சுமந்தபடி லிங்குகளை தோளின் குறுக்காகப்போட்டபடி அவள் நடப்பது தனியான கம்பீரம்! காட்டுக்குள் நீண்ட தூரங்கள் நடந்து, காடுமுறித்து, எமக்குத் தேவையான சாமான்களை நாம் சுமந்து வருவது வழக்கம். கனத்த சுமைகள் தோளை அழுத்த அந்த வேளையிலும் இவள் கலகலத்தபடி வருவாள். எங்களுக்கு பாரங்குறைந்தது போற்தோன்றும்.

1990 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்திய இராணுவம் எம் நாட்டைவிட்டு வெளியேறிய போது, காட்டில் இருந்து இருநூறு பேர்கொண்ட குழு யாழ்பாணம் வந்தது. இக்குழுவில் பாமாவும் ஒருத்தியாக இருந்தாள். அன்றிலிருந்து விடுதலைப்புலிகள் மகளிர் படையணி சந்தித்த அனேகமான சண்டைகளில் அவளது தடங்கள் பதிந்தவண்ணமிருந்தன.

கோட்டை, பலாலி, காரைநகர், சிலாவத்துறை, பலவேகய ஒன்று, மணலாறு என்ற நீண்ட பட்டியலில் அங்குள்ள காவலரண்களில் அவளது கால்கள் அகலப்பதிந்தன .

பாமா! குறிப்பிட்ட சில காலப்பகுதியினுள்ளே இவளது வளர்ச்சி அபாரமானது. இவளின் உறுதியான செயற்பாடுகளும் நினைத்ததைச் சாதிக்கும் பண்பும் இவளைப் படிபடியாக வளரச் செய்தன.

பலாலிக் காவலரண்களில் பாமா நின்றபோது, அவளது செயற்பாடுகள் யாவையும் மறக்கமுடியாதவை. எந்த வேலையும் எனக்குத் தெரியாது என்று இவள் தலையாட்டியதை நாங்கள் காணவில்லை.

"வீட்டிலிருந்து எல்லாம் தெரிஞ்சுகொண்டே வந்தனாங்கள். இயக்கத்தில் எவ்வளவு தூரம் வளர்ந்து விட்டோம். எல்லாம் முயற்சியாலைதான்" என்று அடிக்கடி கூறுவாள்.

அவற்றை நாம் பலாலியில் நேரில்கண்டோம்.

அது 1990 ஆம் ஆண்டின் மழைக்காலப்பகுதி. பலாலியின் செம்பாட்டுமண். மழை ஈரத்தில் பிசுபிசுத்தது. கால்கள் சேற்றில் புதைந்தன. சேற்றுக் குழம்புகளின் நடுவே இருந்த அந்தக் காவலரண் அடிக்கடி எதிரியின் தாக்குதல்களுக்கு ஆளாகிக்கொண்டிருந்தது ஓயாமல் எறிகணைகள் விழுந்ததால், நிலம் கரியாகிப்போனது. அடிக்கடி அவ்விடத்திற்கு முன்னேற இராணுவம் முயற்சிப்பதும் நாம் அடித்துத் துரத்துவதும் வழக்கமான ஒரு நிகழ்ச்சியாகிப்போனது.

இத்தருணத்தில், முதல் நாள் நடந்த கடுமையான சண்டையில் பதினான்குபேர் காயம் அடைந்தனர். எதிரியின் முக்கிய இலக்கான அந்த இடத்தில் தொடர்ந்தும் எமது குழுவை நிலைநிறுத்துவதற்கு நாம் ஒரு பொறுப்பான ஆளைத் தேடிக் கொண்டிருந்தபோது, பாமாவின் செயற்பாடு நம்பிக்கையூட்டுவதாய் அமைந்தது.

"நான் குறூப்பைக் கொண்டு போறன்".

அவள் எழுந்து சொன்னாள். இதுவரையும் பெரிய களங்களைக்கண்டவள் அல்ல அவள்

**லெப்.கேணல் பாமா**



சியாமளா சண்முகசுந்தரம்
இன்பருட்டி, அல்வாய்
பிறப்பு : 1971 - 03 - 28
வீரச்சாவு : 1993 - 11 - 12

ஆனால், அவளிடம் ஒரு வித்தியாசமான திறமை இருக்கத்தான் செய்தது. அவளுக்குக் கொடுக்கப்பட்ட குழுவை திறமையாக செயற்பட வைத்த விதம் எமக்கு நிறைவைத்தந்தது. அடிக்கடி இராணுவத்திற்கு தலையிடி கொடுப்பதும் பாமாவின் வேலையாக இருந்தது. அந்தக்காலங்களில் பலாலியின் பனை வெளிகளை ஊடறுத்தபடி எதிரியின் தேடொளி இரவைப் பகலாக்கும். மிகமிகக்கிட்டவாக தனது ஒளியைப் பாய்ச்சியபடி இருக்கும் போதெல்லாம் பாமா அதற்கு குறிவைப்பாள். அவளது 'பிறண்' குறி தவறியதாக நாம் கேள்விப்படவேயில்லை. பயிற்சி முகாமிலும் சரி சண்டைகளிலும் சரி அவள் நன்றாக குறிபார்த்துச் சுடும் திறமை பெற்றவளாக இருந்தாள்.

அப்படி ஒரு இடத்தில் தேடொளி உடைய, மறு இடத்தில் எதிரி அதைப்பொருத்த மீண்டும் உடையவைத்து, உண்மையில் அவர்களைச் சலிப்படையவே செய்துவிட்டாள். அந்த நீண்ட பனைகளில், நிலையெடுத்தபடி இராணுவக் காவலரண்களை நோக்கி அடிக்கடி அருள் 89 ஐ அடிப்பாள். அது ஒரு விளையாட்டுப் போலை... ஆனால், குறிதப்பாத ஒன்றாக அவளுக்கு இருக்கும்.

இப்படி எத்தனை சம்பவங்கள்! பாமாவின் துடிப்பான அந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பலாலியின் புழுதிபடிந்த செம்பாட்டுமண் சொல்லும்; கனத்த காற்று சொல்லும்.

பலாலிக்குப் பிறகு பெரிய களமாக இவளுக்கு ஆனையிறவுக் களம் அமைந்தபோது, அதிலும் தன்திறமைகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆகாயம், கடல், வெளி, நடவடிக்கையில் மகளிர்படையணியின் பக்கம் மும்முரமான சண்டையில் இவள் நின்றாள். உக்கிரமான மோதல். மழைபோல ரவைகள் காதை உரசுவதாக வரும். மயிரிழையில் தப்பித்த எறிகணை வீச்சுக்கள்... பாமாவின் குழுவிலும் அனேகம்பேர் காயப்பட்டுத்தான் போனார்கள். எதிரி பின்வாங்கும்வரை பாமா மட்டும் தனித்து நின்று அடிபட்டதை நினைக்கின்றோம். கடைசியாகக் காலிலே பலத்த காயமடைந்த ஒரு போராளியை அந்தக் கும்மிருட்டு நேரத்திலே கண்டுபிடித்துப் பின்னுக்குக்கொண்டுவந்து இவள் மூச்சுவிட்டபோது, தனியொருத்தியாக நின்று தடயங்கள் எல்லாவற்றையும் பொறுக்கிய போது...

ஆனையிறவுச் சண்டையில் இவள் தலையில் காயப்பட்டாள். இவள் தப்பி வருவாள் என்பதில் எங்களுக்கு ஒரு துளியளவு நம்பிக்கையே இருந்தது. ஆனால், பாமாவின் திடமான உடல் அமைப்பும் உறுதியுமே அவளைத் தப்பவைத்தது. மீண்டும் பழைய நிலைக்கு இயங்கவைத்தது.

நிறையக் களம்கண்ட ஒரு போராளியாக, ஒரு குறும்புக்காரியாக, எல்லோருக்குமே உதவுகின்ற இளகிய மனம்படைத்தவளாக நாம் அவளைக் கண்டோம்.

இப்படித்தான் ஒருநாள்...

அது லெப். கேணல் ராஜனின் வழிநடத்தலில் நடைபெற்றுக்கொண்டிருந்த அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி. அதில் இவள் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்போது, ஒருநாள் இவளது முகாமுக்கு ஒரு சிறுமியும் சிறுவனும் சாப்பாடு கேட்டுவந்தனர். அப்போது அங்கு உணவேதும் இருக்கவில்லை. இதை அவதானித்த இவள், எல்லோரிடமும் இருக்கும் காசு எல்லாவற்றையும் சேர்க்க ஐம்பது ரூபா வந்தது. அதை அவர்களிடம் கொடுக்கச் சென்றபோது, அச்சிறுமியிடம்;

"உங்களது பெயர் என்ன?"

என்று கேட்க, அப்பிள்ளை வாய் திறக்கமுடியாத நிலையில் இருந்ததைக்கண்டு இவள்...

"ஏன்?" என்று விசாரித்தாள். விமானக் குண்டுவீச்சின்போது சன்னமொன்று தாடைக்குள் தாக்கியதால் வாய்திறக்க முடியாது என்ற விபரத்தை அந்தச் சிறுமி சைகைமூலம் கூற, இவளது கண்கள் குளமாகின.

**சுதாமதி**

அந்தக் காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு, "இந்தச் சின்னப் பிள்ளை என்ன பாவம் செய்தது? இதுக்கு இவங்களிற்கு முறையான பாடம் படிப்பிக்கவேணும்" என்று சொல்லியபோது, இவளது குரல் தழுதழுத்தது. அடிக்கடி, "இந்தக் கஸ்டமெல்லாம் எங்களோட முடிஞ்சிடவேணும். எங்கட சின்னனுகள் அனுபவிக்கக் கூடாது. அதுகள் சந்தோசமா தங்கட தாய், தகப்பனோட வாழோணும்" என்று கூறி, அவள் கண்கள் கலங்கித் தவித்ததை நினைக்கும்போது...

அன்று படைத்துறைக் கல்லூரியில், வோக்கி பற்றிய வகுப்பு. புதிய ரகங்கள், புதிய தொழிற்பாடுகள் நுட்பமாக ஆராய்ந்து விளக்கப்பட்டது. இறுதியாக விரிவுரையாளர் "இந்த (CI 25) வோக்கி புதிசு. இதின்ரை தொழிற்பாட்டைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்லித்தரமாட்டன். நீங்களா இதை ஆராய்ந்து கண்டுபிடிக்கவேணும். குறிப்பிட்ட கால அவகாசம் தருவன்" என்றுகூறி முடித்தபோது, முழுமூச்சாய் அதனோடு ஒன்றி, அதன் தொழிற்பாட்டை அறிவதில் நேரங்காலம் இல்லாது, கண்ணாய் இருந்ததை இப்போது நினைத்தாலும்...

அந்த முயற்சிகளில் அவள் வெற்றி பெற்றாள். அதன் தொழிற்பாட்டை, முதலில் கண்டு பிடித்து விளங்கப்படுத்தினாள். அப்போது எல்லாப் போராளிகள் மத்தியிலும் இவளின் திறமை வெளிப்பட்டது. இவளின் விடாமுயற்சியை நாம் எங்களுக்குள் சொல்லிச் சொல்லி வியந்து போனோம்.

சதுரங்கம் விளையாடுவது அவளுக்குப் பிடித்தமான ஒரு விளையாட்டு. நுட்பமாகவும் திறமையாகவும் அவள் விளையாடுவது யாவரையும் வியக்க வைக்கும். பார்ப்பவரை பார்த்துக்கொண்டே நிற்க வேண்டும் போல் நினைக்கத் தூண்டும். அவளின் இராசாவும் இராணியும் தோற்றதாக வரலாறில்லை. அந்தளவுக்கு எதிரே விளையாடுபவரை விழுத்துவதில் குறியாக நிற்பாள். அவளின் இன்னொரு விருப்பமான விளையாட்டு கரப்பந்தாட்டம். மாலை நேரத்தில் மைதானத்தில் அவள் விளையாட வந்துவிட்டாள் என்றால், மைதானம் கலகலத்துப்போகும். தள்ளி எட்டி ஓடி ஓடி அடிப்பது அவளுக்கு ஒரு கலையாகத்தான் இருந்தது.

இவளது குறும்புகளுக்கும் குறைச்சலில்லை. நேரங்காலம் பாராமல், சுற்றி நிற்பவர்களை வயிறு குலுங்க சிரிக்கவைத்துவிட்டு நழுவிவிடுவாள்.

ஒரு தடவை இவளும் இவளது தோழியும் ஒரு உந்துருளியில் இரவு ஒன்பது முப்பது மணியளவில், வடமாராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டு இருந்தனர். அவளது உந்துருளியின் வெளிச்சம் மிகவும் மங்கலானது. பாதை தெளிவாகத் தெரியவில்லை. புறாப்பொறுக்கியடியில் வந்துகொண்டிருந்தபோது ஒரு சரக்கு உந்துருளி மிகுதியான ஒளியைப் பாய்ச்சியபடி எதிர்ப்பக்கமிருந்து வந்துகொண்டிருந்தது. பாமா உடனடியாகத் தனதுவெளிச்சத்தை அணைத்துவிட்டு கையைமேல் நோக்கிக் காட்டினாள், உடனே சரக்கு உந்துருளியின் ஓட்டுனர், உலகுவானூர்தி வருவதாக எண்ணி, தனது வெளிச்சத்தை அணைத்துவிட்டு, ஓரமாக வாகனத்தை நிறுத்தவும், இவள் தனது உந்துருளியை வேகமாக ஓட்டிச்சென்று விட்டாள். இப்படி நான்கு, ஐந்து வாகனங்களை நிறுத்தி, அந்த இடை வெளியைப் பயன்படுத்தி தன் வாகனத்தை ஓட்டினாள். முனியப்பர் கோயிலடியில் செல்லும்போது ஒரு வாகனம் வர அதற்கும் அவள் மேல்நோக்கி கையைக் காட்டி நிறுத்திய பின்னர்தான் பார்த்தாள், அது எமது போராளிகளின் வாகனம். ஒரு நிமிடம் அதிர்ந்து போனாலும் உடனே விறுவிறு என்று உந்துருளியை அதிவேகமாக ஓட்டியபடி வந்து சேர்ந்து, சிரிசிரியென்று சிரித்த பாமா, இப்போதும் கண்ணுக்குள்ளேதான் நிற்கின்றாள்.

இவளுக்கு எதுவும் ஏறுமாறாகச் சொல்லி கோபப்பட வைப்பது எங்களுக்கு பெரிய விளையாட்டுப்பார்த்தாக இருக்கும். எதற்காவது இவளுக்கு கோபம் வந்தால் கடகடவென்று பேசி விட்டு அடுத்த நிமிடம் மறந்து போய் நின்று சிரிப்பாள். பேசுவது முழுக்க அடுக்கு மொழியில் தான். கதைக்கும் போது வேகமாக கதைப்பதால் அவளது கதை மற்றவர்களுக்கு விளங்குவது கடினம். அதனால் அவளை 'நடுங்கல்' என்று கேலிசெய்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

## தமிழீழ விளையாட்டு அரங்கு

### வலயம் - 01 வலைப்பந்தாட்டப் போட்டி

# சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது

வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற யாழ். கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வலயம் ஒன்றிற்கான 17 வயதிற்குட்பட்ட ,19 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இரண்டிலும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச் சென்றுள்ளது.



17 வயதிற்கு கீழ்ப்பட்ட சுண்டுக்குளி மகளிர் அணி.

17 வயதுக்குட்பட்ட பிரிவு ஆட்டத்தில் இவர்கள் 15:13 என்ற புள்ளிக்கணக்கில் வேம்படி மகளிர் கல்லூரியை வென்று கிண்ணத்தைத் தட்டிச் சென்றார்கள். இரு அணிகளும் விட்டுக்கொடுக்காது போட்டியிட்டபோதும், இடைவேளையின் போது சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியினர் 9:6 என்றவாறு முன்னணியில் நின்றனர். இருந்தும் ஆட்டத்தின் இறுதி அரைப்பகுதியின் போது, வேம்படி மகளிர் கல்லூரி தமக்குக்கிடைத்த பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். ஆனால், சுண்டுக்குளி அணியினர் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக்கொண்டனர். இவ்வாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியின் றுசில்லா பெனடிக்ட், அஜந்தா வேம்படி மகளிர் கல்லூரியின் எஸ். சுஜீவா, வி. விஜயபிரபா ஆகியோர் மிகத்திறமையாக ஆடினார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட பிரிவினரின் இறுதியாட்டம் மிகப் பரபரப்பானதாக அமைந்தது. கடும்போட்டியொன்றின் பின்னரே தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட கன்னியர்மடம் தமிழ் வித்தியாலயத்தை 22:21 என்றவாறு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தோற்கடிக்க முடிந்தது.

இடைவேளை வரையும் அதன் பின்னும் கன்னியர்மடம் தமிழ் வித்தியாலய அணியினர் வெற்றியை ஒரு ஸ்திரமான நிலைக்குக்கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியினர் மனஞ்சோராது விளையாடி, ஆட்ட நிறைவிற்கு 2 நிமிடங்கள் இருக்கும் போது, புள்ளிகளை 21:21 என்றவாறு சமப்படுத்தினர். இந்நிலையில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடியும் என்ற ஒரு நிலையில் இறுதி 30 வினாடிகள் மட்டும் இருக்கும்போது, பிரபாலினி பெற்றுக்கொடுத்த ஒரு புள்ளி, அவர்களை வலயம் ஒன்றின் வெற்றி வீராங்கனைகள் ஆக்கியது. தமிழ்க் கன்னியர் மடத்தின் மேரி விஜயலியஸ், எஸ். கிருபாலினி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியின் காஞ்சனா, பிரபாலினி ஆகியோரின் திறமைமிகுந்த விளையாட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது. ■

# பெரும்பலம் பொருந்திய அணிகளையே இறுதி ஆட்டங்களில் சந்தித்தோம்

## □ சுண்டிக்குளி வலைப்பந்தாட்ட அணித்தலைவர்கள்

யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்றின் வலைப்பந்தாட்ட சம்பியன்களான சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் 17, 19 வயதுப்பிரிவு அணிகளின் தலைவிகள் றுசில்லா பெனடிக்ட், ம. காஞ்சனா ஆகியோரையும் பயிற்றுநர் திருமதி கரிகரனையும் சந்தித்து, அவர்களின் சாதனை தொடர்பாக உரையாடப்பட்டது இதற்கான அனுமதியை கல்லூரி அதிபரிடம் கோரியபோது, விருப்புடன் அனுமதித்தார்.

17 வயதுப் பிரிவு அணித்தலைவி றுசில்லா பெனடிக்ட்டிடம் அவர் சந்தித்த அணிகள் பற்றி வினவியபோது, கால் இறுதி ஆட்டத்தில் இருந்து இறுதியாட்டம்வரை தாம் சந்தித்த கொக்குவில் இந்து, கனகரத்தினம் ம. வி., வேம்படி மகளிர் கல்லூரி மூன்றுமே திறமையான அணிகள் என்பதைக் குறிப்பிட்டார். இறுதியாட்டத்தில் இடைவேளை வரை, வேம்படி முன்னணியில் இருந்ததாகவும், தமக்கு அவர்கள் பெருஞ்சவாலாக இருந்ததாகவும் கூறிய அவர், இடைவேளையின்பின் தாங்கள் திறமையாகவும், சாதுரியமாகவும் விளையாடியதால், வேம்படியை வெற்றிகொள்ள முடிந்தது என்று கூறினார்: தங்கள் அணியில் எல்லோரும் திறமைமிகுந்தவர்கள் என்பதைக்கூறும் றுசில்லா, அஜந்தாவின் வீச்சான விளையாட்டு தமக்குக் கூடுதல் பலம் என்பதையும் குறிப்பிட மறக்கவில்லை. தொடர்ந்து வரப்போகும் மாவட்டமட்டப் போட்டிகள் பற்றி வினவியபோது, அது இலகுவாக இருக்கும் எனத்தான் நம்பவில்லை எனவும், இதற்காக இப்போதிருந்தே கடுமையான பயிற்சிகளில் தம் அணியினரின் ஈடுபட்டுவருவதாகவும் கூறுகின்றார்.



19 வயதிற்கு கீழ்ப்பட்ட சுண்டுக்குளி மகளிர் அணி.

இம்முறை வலயம் ஒன்றின் சாம்பியன்களாக வரமுடிந்தமைக்கு தம் அணியினர் பரிபூரண ஒத்துழைப்பு ஒரு காரணம் என்று கூறும் இவர், தங்களை நெறிப்படுத்திய பயிற்றுநருக்கு நன்றி கூறுகின்றார். அதிபரின் பரிபூரண ஒத்துழைப்பும், பயிற்றுநரின் தீவிர பயிற்சியும் தமது வெற்றிக்குக் காரணங்கள் என்கின்றார் அணித்தலைவி றுசில்லா.

தொடர்ந்து 19 வயதிற்குட்பட்ட பிரிவுத் தலைவி ம. காஞ்சனாவுடன் உரையாடினோம். இவர் கடந்தவருடம் 17 வயதிற்குட்பட்ட பிரிவில், அணித்தலைவியாக இருந்தவர். "17 வயதுப் பிரிவில் எமது அணி சம்பியன் ஆகிவிட்டது. எனவே நாம் கிண்ணத்தை விட்டுவிடலாமா? என்றதொரு அழுத்தத்துடன்தான் ஆட ஆரம்பித்தோம்" என்று ஆரம்பிக்கிறார் இவர். மேலும் கன்னியர்மடம் தமிழ் வித்தியாலயம் மிகத்திறமையான அணி என்றும் கூறுகின்ற இவர், எப்படியாவது வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றே தீருவது என்று தீர்மானித்தேன் என்கிறார். விளையாட்டின் முதல் அரைப் பகுதியில் அவர்களே முன்னணியில் இருந்தார்கள். ஆனால், இடைவேளையின்பின் நாங்கள் மேவினோம். இறுதி வெற்றிக்குக் காரணம் எமது ஆற்றல்வாய்ந்த வீராங்கனைகள்தான். இறுதி சில செக்கன்களில் அற்புதமான வகையில் பிரபாலினி பெற்ற புள்ளி எமக்கு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுத்தந்தது" என்கிறார்.

மாவட்டப் போட்டிகள் பற்றி வினாவியபோது "ஆற்றல்வாய்ந்த அணிகளுடன் மோதும் நிலை ஏற்படும். அது இலகுவாக இராது. எனினும் நிறையவே பயிற்சிகள் செய்கிறோம். பயிற்றுநரும் எம்முடன் சேர்ந்து உழைக்கிறார். பயிற்றுநரை எவ்வளவு குறிப்பிட்டாலும் போதாது. அந்தளவு எமக்கு முழுப்பலம் தருபவர் அவரே எனும் காஞ்சனா, அதிபர் தருகின்ற ஒத்துழைப்பு மிகவும் பெரியது என்று நன்றியுடன் கூறுகின்றார்.

பயிற்றுநர் திருமதி கரிகரனிடம் கல்லூரியின் வெற்றியைப் பற்றிக் கேட்டோம். தம் வெற்றிக்காக பெரிதும் மகிழும் அவர், தம்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

### ஆறு பேர் கொண்ட துடுப்பெடுத்தாட்டம்

# ஒரேற்றர் வெற்றிக் கிண்ணத்தை ஜொனியன்ஸ் அணி பெற்றது

முன்னாள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஒரேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி நிறைவடைந்துள்ளது. இத்தொடரின் இறுதியாட்டம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெற்றது. இதில் மானிப்பாய் பரிஸ் அணியினருடன் ஜொனியன்ஸ் அணியினர் மோதி, வெற்றிக்கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், 6 பேர்கொண்ட 5 பந்து பரிமாற்றங்கள்கொண்ட ஆட்டமாக இது அமைந்திருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் தமக்கு ஒதுக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில், 3 இலக்கு இழப்பிற்கு 45 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இதில் பிரசாந்தன் 16 ஓட்டங்களும், சிவசுதன் 13 ஓட்டங்களும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும், பலம்வாய்ந்த ஜொனியன்ஸ் இன்னும் ஓட்டங்களைப் பெற்றிருக்கவேண்டும். இதைத் தடுத்தது, மானிப்பாய் பரிஸ் அணியின் பந்துவீச்சாகும். குறிப்பாக சுதர்சன் தன் பந்துப் பரிமாற்றத்தில், 4 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார்.

தொடர்ந்து தம் முதலாவது இனிங்சை ஆரம்பித்த மானிப்பாய் பரிஸ் அணியினர். 3 இலக்கு இழப்பிற்கு 39 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். மானிப்பாய் பரிஸ் அணியினர், முதல் பந்து பரிமாற்றத்தில் பரபரப்பை ஏற்படுத்தினர். ஆயினும் பின்னர் சோபிக்கவில்லை. திலக்ராஜ் 22 ஓட்டங்களும் பிரபாகரன் 6 ஓட்டங்களும் பெற, மிகுதி உதிரியோட்டங்களாக அமைந்தன. இந்த இனிங்சில் சூரியகுமார் கன்னிப் பந்துப் பரிமாற்றத்தில், இரண்டு இலக்குகளையும் சந்தித்தது, அவரின் திறமையை வெகு துலாம்பரமாகக் காட்டியது.

தொடர்ந்து தம் இரண்டாவது இனிங்சை அதிரடியாக ஜொனியன்ஸ் ஆரம்பித்தது. 1 இலக்கினை மட்டும் இழந்து, 69 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சுதேசனின் நேர்த்தியான ஆட்டம் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். ஒன்று 6, நான்கு 4 என்று மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்துவிட்டார். அவர் ஆட்டம் 34 ஓட்டங்களுடன் ஆட்டம் இருக்கும்போது, அணியின் மொத்த எண்ணிக்கை 47 ஆக இருந்தது. இவரின் சோடியாக ஆடிய காண்டீபன் மறுமுனையில் அபாரமாக ஆடி, ஆட்டமிழக்காது, 31 ஓட்டங்களைப் பெற்றார். இவரும் தன்பங்கிற்கு ஒன்று ஆறு, இரண்டு நான்கு என்ற வகையில் பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# தமிழீழ உட்கட்டு......

7. மின் பிறப்பாக்கியும் அதன் உபகரணங்களும்.
8. சூரிய கதிர் பிறப்பாக்கி.
9. கனனிகள் அதன் உதிரிப் பாகங்கள்.
10. தொலைத்தொடர்புச் சாதனங்கள்.

### விவசாய கைத்தொழில்

1. உழவு இயந்திர உதிரிப்பாக இறக்குமதியும் பொருத்துதலும்.
2. நீர் இறைக்கும் இயந்திர உற்பத்தி.
3. கிருமிநாசினி தெளிப்பான் உற்பத்தி.
4. விவசாய உபகரணங்கள்:- மண்வெட்டி, பிக்கான், சவள், கொளு, கலப்பை உற்பத்தி.

### மீன்பிடி கைத்தொழில்

1. வலை பின்னல் தொழிற்சாலை.
2. பனிக்கட்டி தொழிற்சாலை.
3. மீன் பதனிடும் தொழிற்சாலை.
4. குளிர் ஊட்டப்பட்ட களஞ்சியங்கள்.
5. மீன்பிடி உபகரண உற்பத்தி தொழிற்சாலை.
6. மீன் தூள் ஆலைகள்.
7. 'நைலோன்' விடுகயிறு உற்பத்தி.
8. மிதப்பு மற்றும் உபகரண உற்பத்தி

### கப்பல் கட்டும் தொழில்

1. பாரிய கப்பல் கட்டும் வேலைத்தளங்கள்.
2. பிளாஸ்ரிக் வள்ளங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.
3. கப்பல் பழுது திருத்தும் நிலையங்கள் (Dry Dock Wet Dock).
4. சிறியதும், இடைத்தரமான உருக்கினால் ஆன வள்ளங்கள் அமைக்கும் தொழிற்சாலை.
5. இளுவைப்படகு அமைக்கும் தொழிற்சாலை.

### இரசாயன கைத்தொழில்

1. உர உற்பத்தி.
2. கண்ணாடி தொழிற்சாலை
3. தோல் பதனிடுதலும், தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலை
4. தீப்பெட்டி உற்பத்தி.
5. காகித ஆலைகள்.
6. பெற்றோலிய இரசாயன உற்பத்திகள்.
7. மருந்துவகை உற்பத்தி தொழிற்சாலை.
8. பிளாஸ்ரிக் உற்பத்தி தொழிற்சாலை.
9. இறப்பர்பொருள் உற்பத்தி.
10. சவர்க்கார உற்பத்தி.
11. சீமெந்து.
12. உப்பு, உப்பு சார்ந்த கனிய உற்பத்தி தொழிற்சாலை

13. தீந்தை வகைகள் உற்பத்தி தொழிற்சாலை
14. பற்பசை உற்பத்தி
15. றேயோன், நைலோன், பொலியஸ்ரர் நூல் உற்பத்தி

### உயிரியல் தொழில்நுட்பம் [BIO TECHNOLOGY]

1. பியர் உற்பத்தி [BEER].
2. உயிரியல் சவர்க்காரம் உற்பத்தி. [BIO SOAP].
3. நொதிய பொருள் உற்பத்தி
4. பால்கட்டி, வெண்கட்டி உற்பத்தி.
5. காளான் உற்பத்தி.
6. வினாகிரி உற்பத்தி.
7. செலைன் உற்பத்தி [SALINE].

### கைத்தொழில்கள்

1. செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை.
2. மதுசார உற்பத்தி நிலையங்கள் (வடிசாலைகள்).
3. புகையிலை பதனிடும் நிலையங்கள்.
4. சீனித் தொழிற்சாலைகள்.
5. ஆடைத் தொழிற்சாலைகள்.
6. பால் பதனிடும் நிலையங்கள்.
7. பிளாஸ்ரிக்.
8. இறப்பர் தொழிற்சாலை.
9. குளிர்பானம், மென்பானம்.
10. பிஸ்கட் வகைகள்.

### திருமலை கைத்தொழில் பூங்கா

1. நூல் நூற்றுதலும், நெய்தலும் (SPINNING and WEAVING MILLS).
2. ஆடைத் தொழிற்சாலைகள்.
3. துவிச்சக்கர வண்டி உற்பத்தி.
4. மின்குமிழ், ரியூப் மின்குமிழ் உற்பத்தி.
5. மீன்பிடி வலைகள்.
6. சமையல் பாத்திர உற்பத்தி.
7. நில விரிப்பு [Carpets].
8. மட்பாண்ட தொழிற்சாலை.
9. கண்ணாடி தொழிற்சாலை.
10. பிளாஸ்ரிக் தொழிற்சாலை.
11. மின் கடத்திகள் உற்பத்தி.
12. P. V. C. குழாய்கள் உற்பத்தி.
13. நீர் இறைக்கும் இயந்திரங்கள்.
14. இறப்பர் தொழிற்சாலை.
15. றேடியோ உற்பத்தி.
16. கணனி பொருத்துதல் [COMPUTER ASSEMBLING].
17. தொலைக்காட்சி பெட்டி பொருத்துதல்.
18. சவர அலகு உற்பத்தி.
19. அழகு சாதன உற்பத்தி.

(தொடரும்...)

## பங்களிப்பு......

அவளது கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. மறுகணம் அவளது கண்ணில் நீர்த்துளிகள் தோன்றிப் பளபளத்தன. உமாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. கண்களைத் துடைத்துக்கொண்டே சுகந்தி சொன்னாள்.

'உமா நான் சரியாய் உணர்ச்சி வசப்பட்டுப் போனேன். அத்தான் லண்டனிலிருந்து வந்த நாட்களில அவருக்கு எங்கள் மண்ணைப் பற்றிய நிலைமை விளங்காமல் இருந்தது. ஆனால்..... அவர் இப்ப முற்றாக மாறிப்போயிட்டார், என்று நினைக்க எனக்கு சந்தோசத்தில கண்ணீரே வந்திட்டுது.'

'சுகந்தி! நான் பயந்து போனேன், நீர் அழுகிறீராக்கும் எண்டு நினைச்சிட்டன்' பேசிக் கொண்டே தோழிகள் தங்கள் தங்ககங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்.

அன்று பகல் முழுவதும் ராகவனைச் சந்திக்க முடியவில்லை. அவசர ஆபரேசன் கேஸ்கள் நிறைய இருந்ததால், அவற்றை முடித்துக் கொண்டுவர சுணங்கி விட்டது. அவனைக் கண்டதும் சுகந்தி,

'அத்தான்! நீங்கள் பிளட் டொனேற் பண்ணினதாய்க் கேள்விப்பட்டன் உண்மை தானே?'

"ஓம் எங்கடை மண்ணுக்காக சிந்தப்படுகிற இரத்தத்தை ஈடுசெய்ய வேண்டியது இந்த மண்ணில வாழுற எங்கடை கடமை தானே".

"அத்தான் உங்களுக்கு உடம்பு வீக்காய்த் தெரியேல்லையே?"

"இல்லை சுகந்தி. இண்டைக்குத்தான் நல்ல உற்சாகமாய் நின்று கேஸ்களைக் கவனிச்சிருக்கிறன். என்ரை மனதில ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கு, நானும் என்னாலான பங்களிப்பைச் செய்து போட்டன் என்று."

"ஏன் நீங்கள் செய்யிற பணியே ஒரு பங்களிப்புத் தானே? அதை மறந்திட்டீங்களே?"

தனக்கு ஏற்பட்டிருக்கும் மன நிறைவுக்கு மூலகாரணமாய் விளங்கிய சுகந்தியை, அவனது மனம் மானசீகமாய் வாழ்த்தியது.

மறுநாள் நகரமே விழாக் கோலம் பூண்டது. தெருக்கள் எல்லாம் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ராகவனது சைக்கிள் அந்தத் தெருவில் போய்க்கொண்டிருந்தது. அவனது நெஞ்சில் இணைந்தவாறு பாரில் சுகந்தி அமர்ந்திருந்தாள். லண்டன் மாநகரவீதிகளில் மிதந்து திரியும் கப்பல் போன்ற கார்களை ராகவன் ஒருகணம் நினைவில் மீட்டுக்கொண்டான். அதைவிட எங்கள் தெருக்களில் பவனிவரும் சைக்கிள்களில் திரிவதில், ஒருவித உற்சாகமும் மனநிறைவும் ஏற்படுவதை அவனால் நன்கு உணரமுடிந்தது. வெற்றிவிழாவில் பங்கேற்பதற்காய் தம்மை மறந்த நிலையில் போய்க்கொண்டிருந்தனர் அந்தத் தம்பதிகள். ■


விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டு கழகம்
பிரித்தானியக் கிளை
வழங்கும்
**எழுச்சிக் கானங்கள்**

சன்னங்கள் சன்னதம் ஆடும் வேளையிலும்
கனக்கும் வெய்யிலிலும் வயல் வெளியிலும்
உப்புக் காற்றிலும், ஊர் மனையிலும்
உரத்து எழுந்த உணர்ச்சி வரிகளே
இவ் எழுச்சிக் கானங்கள்

காலம்: 24 - 09 - 94 (சனிக்கிழமை)
நேரம்: பி.ப. 6 மணி.
இடம்: Brent Town Hall
Forty Lane
Wembley.

இவ்வெழுச்சி கானங்கள் நிகழ்ச்சியில் கனடா, நோர்வே, இலண்டன் வாழ் நம் முன்னணிக் கலைஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

தொடர்புகட்கு: 081 - 503 4294
081 - 470 8593
0956 - 314370


## ஒரேற்றர் வெற்றிக்...

மானிப்பாய் பரிஸ் அணி தம் இரண்டாவது இனிஞ்சை ஆரம்பிக்கும்போது தாம் வெற்றிபெற, 76 ஓட்டங்களை 5 பரிமாற்றங்களில் பெறவேண்டிய அழுத்தமான நிலையில் தம் ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வந்த கெங்காதரன், 10 ஓட்டங்களை மட்டும் பெறமுடிந்தது. ஏனைய வீரர்களால் சோபிக்க முடியவில்லை. ஜொனியன்ஸ் அணியினரின் திறமையான பந்துவீச்சின் முன்னால், மானிப்பாய் பரிஸ் அணி முற்றாகச் செயலிழந்து நின்றது. மானிப்பாய் பரிஸ் அணியினர், முதல் பந்து பரிமாற்றங்களில், அடித்தாட முடியாமல்போனது, அவர்களுக்குப் பாதகமாக அமைந்திருக்கலாம் என்று ரசிகர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட 5 ஓவர்களில் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டார்கள். இறுதியில் 1994 இற்கான ஒரேற்றர் சுப்பிரமணியம் முதலாவது வெற்றிக்கிண்ணத்தை ஜொனியன்ஸ் அணியினர் பெருமையுடன் தனதாக்கிக்கொண்டார்கள். ■


தமிழீழ விடுதலைப்புலிகளின் (பிரித்தானியக் கிளை)
துரித தொலைபேசிச் செய்திச் சேவை

விடுதலைப் புலிகளின் நாளாந்த செய்திச் சேவையை தாமதமின்றி உடன் கேட்கக்கூடிய வகையில் 50 இணைப்புக்களுடனான புதிய தொலைபேசி இலக்கம் பாவனைக்கு வந்துள்ளது.





மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன்.

**லெப். கேணல் திலீபன்

# 26 ☆ 09 ☆ 94

# தியாக திலீபனின்

# ஏழாம் ஆண்டு நினைவு நாள்



விடுதலைப்புலிகள்
வாழவேண்டுமென்றோ,
ஆளவேண்டுமென்றோ
ஆசை
கொள்ளவில்லை.
எமது மக்களுக்கு
நிரந்தரமான,
சுபீட்சமான
எதிர்காலம்
கிடைக்குமானால்
நாம் அனைவரும்
மரணிக்கவும் தயாராக
உள்ளோம்.

**- திலீபன்**



நான் என்னுயிரினும்
மேலாக நேசிக்கும்
மக்களே!
உங்களிடம் ஒரு
பெரும் பொறுப்பை
விட்டுச் செல்கிறேன்.
நீங்கள் அனைவரும்
பரிபூரணமாகக்
கிளர்ந்தெழவேண்டு
ம். இங்கு ஒரு
மாபெரும் புரட்சி
வெடிக்கட்டும்.

**- திலீபன்**






U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,